# அஹ்லுல்பைத் பற்றி

# அறுபது ஹதீதுகள்

இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி



தமிழில்: மௌலவி நிஸாம்தீன்

அல்முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழகம், இலங்கைக் கிளை

# அஹ்லுல்பைத் பற்றி

# அறுபது ஹதீதுகள்

இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி

தமிழில்:

மௌலவி நிஸாம்தீன் (மன்பஈ)

**நூல் விபரம்:**

தலைப்பு: அஹ்லுல்பைத்துகளைப் பற்றி அறுபது ஹதீதுகள்

நூலாசிரியர்: இமாம் ஜலாலுத்தீன் சுயூதி

தமிழில்: மௌலவி நிஸாம்தீன் (மன்பஈ) ©

வெளியீடு: அல்முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழகம்,
இலங்கைக் கிளை

பதிப்பு: 2014 அக்டோபர்

பிரதிகள்: 500

# மொழிபெயர்த்தோன் உரை

கடந்த தசாப்தங்களைப் போலல்லாது அண்மைக் காலங்களில் அஹ்லுல் பைத்துக்களின் பக்கம் தங்களின் கவனத்தைத் திருப்பி அவர்களின் வழிகாட்டலில் அல்குல்ஆனை விளங்கி அதன்படி வாழவேண்டும் என்ற எண்ணத்தில், குறிப்பாக நமது வாலிப சமூகம் முன் நிற்பதை நம்மால் அவதானிக்க முடிகின்றது. மனிதனுக்கு வழிகாட்ட வந்த விடுதலை இயக்கங்கள் சத்தியப்பாதையை அவர்களுக்கு காட்டிக் கொடுப்பதற்கு பதிலாக,குழப்பங்களைத் தூண்டக்கூடிய கருத்துக்களை அவிழ்த்துவிட்டு தங்களுடைய இலக்கை விட்டு வேறு திசைக்குச் சென்றுகொண்டிருக்கின்றன.

அஹ்லுல் பைத்துக்களுக்கும் அவர்களைப் பின்பற்றுவோருக்கும் எதிராக உண்மைக்கு முற்றிலும் மாற்றமான கருத்துக்கள் கண்மூடித்தனமாகக் கட்டவிழ்த்துவிடப்படும்போது, அவர்களைப் பற்றி அறியவேண்டும் என்ற அவா இளைஞர்களின் உள்ளத்திலே மேலும் வலுப்பெறுகின்றது. ஒருவகையில் இது பலர், நேர்வழியைக் கண்டு கொள்வதற்கு களம் அமைத்துக் கொடுத்தது என்றால் அது மிகையாகாது. இவ்வாறான வீண்பழிகளைக் கேட்டுக் கேட்டு விரக்தியடைந்த மனிதன் ஒரு புதிய தலைமைத்துவத்தைத் தேடி அலைந்து நேர்வழியை அடைந்து கொள்கிறான். இது அன்றாட நிகழ்வு.

மனிதன் தேடி அலையும் உயரிய இலட்சியக் கொள்கையை அஹ்லுல் பைத்துக்களின் மூலமே அடைந்து கொள்ள முடியும்

என அவர்கள் அறிந்துள்ளனர். தேசியவாத, இனவாத அடிப்படையில் உருவெடுத்த நவீன கால சித்தாந்தங்களும் அதன் நோக்கத்தை இழந்து வருகின்றன. இவ்வேளையில் சகல பிரச்சினைகளுக்குமான தீர்வு அஹ்லுல் பைத்துக்களைப் பின்பற்றுவதிலேயே தங்கியுள்ளது.

இஸ்லாத்தை, நவீனகால சிந்தனைகளோடும் கண்டுபிடிப்புக்களோடும் ஒப்பிட்டு மக்களுக்குச் சமர்ப்பிக்கும் காலமிது. முஸ்லிம்கள் என்றவகையில், நாம் இப்பொறுப்பை அல்குர்ஆனோடு சேர்த்து அஹ்லுல் பைத்துக்களைப் பின்பற்றுவதன் மூலமாகவே செவ்வனே செய்துவிட முடியும். இல்லையேல் இஸ்லாத்தின் அடிப்படையையொட்டிய விடயங்களில் அல்குர்ஆன் மற்றும் அஹ்லுல் பைத்துக்களின் நிழலில், பகுத்தறிவின் ஒப்புதலுடன் கருத்துக்கள் முன்வைக்கப்படாதபோது நாலா புறத்திலிருந்தும் வரும் எதிர் கேள்விக்கணைகளால் நெருக்கப்படுவதோடு மிகவும் தடுமாற்றம் அடைந்து விழிபிதுங்கி நிற்கும் அவல நிலை ஏற்படும்.

இந்நிலை மாறவேண்டுமென்றால், முஸ்லிம் சமுதாயம் அல்குர்ஆனின் செயல் வடிவமாக திகழும் அஹ்லுல் பைத்துக்களைப் பின்பற்றுவது இன்றியமையாததாகும். நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு அஹ்லுல் பைத்துக்களும் நெறிபிறழா தோழர்களும் அல்குர்ஆனின் நடமாடும் பல்கலைக்கழகமாக செயல்பட்டதால்தான் அஞ்ஞானம் மிக்க அறபுலகம், இஸ்லாத்தின் பேரொளியை உலகமெங்கும் சுடர்பரப்பும் மையமாக மாறியது. அஹ்லுல் பைத்துக்களில்

தோன்றிய இமாம்கள் துறைசார்ந்த மாணவர்களைப் பயிற்றுவித்து கல்வியின் மறுமலர்ச்சியில் பெரும் பங்கு வகித்துள்ளனர். அவர்களது இச்சேவையை 21ம் நூற்றாண்டிலும் கூட மேலைநாட்டு கல்விசார் சமூகம் மெச்சுகிறது. அவற்றின் உதவியோடு புதியபுதிய கண்டுபிடிப்புக்களை நோக்கி நகர்கிறது.

அஹ்லுல் பைத்துக்களை அறிமுகம் செய்வதில், அவர்களது உயர்ந்த அந்தஸ்துக்களை உணர்த்துவதில் இமாம் சுயு‘த்தி போன்று பல அறிஞர்கள் முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர். அஹ்லுல் பைத்துக்களைப் பற்றிய மேலதிக விளக்கங்களைப்பெற விரும்புவோருக்கு அவை பெரும் உதவியாக அமையும். அவைகளுள், இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் மற்றும் இமாம் நஸாஈ ஆகியோர் எழுதிய ‘அல் மனாகிப்’ என்ற நூலும், செய்க் அபுல் ஹஸன் அலீ இப்னு அப்திர் ரஹ்மான், அபு‘ அலீ முஹம்மத் இப்னு உபைதில்லாஹ், செய்க் அலீ இப்னு முஅத்தப் இப்னு ஷாகிர், உஸ்தாத் இப்னு தகீம் ஆகியோர் ‘;பழாயிலு அஹ்லில் பைத் (அலை)’ என்ற தலைப்பில் எழுதிய நூற்களும், அபு‘ நயீம் இஸ்பஹானி எழுதிய ‘நுஸவ்லுல் குர்ஆன் ;பீ மனாகிபி அஹ்லில் பைத் (அலை)’ என்ற நூலும், செய்க் முஹம்மத் இப்னு இப்றாஹீம் ஜவூவைனி அஷ் ஷா;பிஈ எழுதிய ‘;பராயிதுஸ் ஸம்தைன்’ என்ற நூலும், அலீ இப்னு உமர் அத்தாருல் குத்னி எழுதிய ‘முஸ்னத் பாத்திமா (அலை)’ என்ற நூலும், குவாரஸ்ம் நகரின் கதீபாக இருந்த அபுல் முஅய்யித் முவ;ப்;பக் இப்னு அஹ்மத் அல்

ஹன்பலி எழுதிய ‘பழாயிலு அஹ்லில் பைத் (அலை)’ என்ற நூலும், அலீ இப்னு அஹ்மத் மாலிகி எழுதிய ‘அல் புசூலுல் முஹிம்மா’ என்ற நூலும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவை தவிர நூற்றுக்கணக்கான நூற்கள் அஹ்லுல் பைத்துக்களின் சிறப்புகள் மற்றும் மேன்மைகள் குறித்து அறிஞர்களால் எழுதப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் இங்கு குறிப்பிடுவதென்பது இந்நூலுக்கு பொருத்தமில்லாததாகும்.

உங்கள் கைகளில் தவழும் இந்நூலும் அதன் தொடரிலே அல்லாமா சுயுத்தி அவர்கள் எழுதிய ‘இஹ்யாஉல் மையித் பி பழாயிலி அஹ்லில் பைத்’ என்ற நூலின் தமிழாக்கமாகும். இதில் அவர் அஹ்லுல் பைத்துக்களின் அந்தஸ்தை தெளிவு படுத்தும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அறுபது அமுதவாக்குகளைத் தொகுத்தளித்துள்ளார்.

பல தடவைகள் இந்தியா, பாக்கிஸ்தானில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல், 1999ம் ஆண்டு மதினா முனவ்வராவில் செய்யித் அப்பாஸ் அஹ்மத் ஸகர் அல் ஹவூஸைனி என்பரால் ஆய்வு செய்யப்பட்டு ‘தாருல் மதீனதில் முனவ்வரா லின் நஷ்ர் வத் தவ்ஸீ;’ என்ற அரபு வெளியீட்டுப் பணியகத்தால் வெளியிடப்பட்டது. தமிழ் பேசும் உலகமும் அவற்றைப் புரிந்து அஹ்லுல் பைத்துக்களின் நிழலில் வாழவேண்டும் என்ற உயர்நோக்குடன் என்னால் முடிந்தளவு கருத்துப் பிசகாமல் எளிய நடையில் மொழியாக்கம் செய்துள்ளேன்.

மொழியாக்கத்தில் பிழைகள் காணப்படின், அவற்றை அறிவிக்கின்றபோது அடுத்தடுத்த பதிப்புகளில் திருத்திக் கொள்ள ஆவண செய்யப்படும்.

**இமாம் ஜலாலுத்தீன் சுயு‘த்தி ஓர் அறிமுகம்**

அல்லாமா அல் ஹாபிழ் ஜலாலுத்தீன் அபுல் பள்ல் அப்துர் ரஹ்மான் இப்னு அபீபக்ர் இப்னு முஹம்மத் இப்னு அபீபக்ர் இப்னு உஸ்மான் அஸ் சுயு‘த்தி ஷா;பியி எனப்படும் இவர் ஹி 849 ரஜப் மாதம் முதலாம் நாள் ஞாயிற்றுக்கிழமை எகிப்தில் உள்ள ‘உஸ்யு‘த்’ என்ற ஊரில் பிறந்தார்.

ஐந்து வயதிற்கு முன்பே தந்தையை இழந்த இவர் சிறுவயதிலிருந்தே கல்வி கற்கத் தொடங்கினார். எட்டு வயதாக இருக்கும்போது அல்குர்ஆனையும் அக்காலத்தில் பிரபல்யமாக இருந்த சில பாட நூற்களையும் மனனம் செய்தார்.

ஹி 864ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து மார்க்கக் கல்வி பயிலும் மாணவராக இணைந்து கொண்ட அவர், நஹ்வு (அரபு இலக்கணம்), பிக்ஹ் (மார்க்கச் சட்டக் கலை), உசூல் போன்ற பல துறைகளை அக்காலத்தில் வாழ்ந்த ஐம்பதுக்கும் அதிகமான அறிஞர்களிடத்தில் கற்றுத் தேர்ந்தார்.

ஹி 866 இல் தனது முதலாவது நூலை எழுதிய இவர், ஹி 871 இல் மார்க்கத்தீர்ப்பு (பத்வா) வழங்கத் தொடங்கினார். ஹி 872 இல் ஹதீஸ் எழுதும் பணியகம் ஒன்றை ஆரம்பித்தார். அவர் தனது வாழ்நாளில் ஷாம் தேசத்தின் பல பகுதிகளுக்கும்,

ஹிஜாஸ், யமன், இந்தியா மற்றும் மொரோக்கோ போன்ற பல நாடுகளுக்கும் பிரயாணம் செய்து அங்கிருந்த அறிஞர்களுடன் அறிவு ரீதியான பல அமர்வுகளில் கலந்து கொண்டார்.

அல்லாமா சுயு‘த்தி, தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், நஹ்வு, மஆனி, பதீஉ, பயான், உசூலுல் பிக்ஹ், கிராஅத், வரலாறு மற்றும் வைத்தியத் துறைகளில் தேர்ச்சி பெற்றிருந்ததோடு அவற்றின் அதிகமான துறைகளில் நூற்களையும் எழுதியுள்ளார். இவை தவிர அவர் கவிப்புலமை உள்ளவராகவும் காணப்பட்டார். அவரால் யாக்கப்பட்ட கவிதைகள் அறபு நூற்களில் காணப்படுகின்றமை இதற்கு சான்றாகும். இதனால் அவரை இரண்டாம் அல்லது மூன்றாம் தர கவிஞராகவும் கணிக்க முடியும்.

மிகவும் நாணசுபாவம் கொண்ட அவர் மன்னர்களினதும், பலம் படைத்தவர்களினதும் தர்பாருக்கு சமுகம் கொடுப்பதை வெறுத்தார். அவர்களது அன்பளிப்புக்களை ஏற்பதையும் தவிர்த்தார். தனது வாழ்நாளின் இறுதிக் கட்டத்தில் கற்பித்தல் பணியிலிருந்து ஒதுங்கி, மக்களை விட்டும் தூரமாகி எஞ்சிய நாட்களை இறைவணக்கத்தில் கழித்தார். தன் வாழ்க்கையை நூற்கள் எழுதுவதிலும் கற்பித்தலிலும் கழித்த இவர் ஹி 911 ஜமாதிஉல் அவ்வல் பிறை 19 வெள்ளிக்கிழமையன்று மரணித்தார். அவரின் ஜனாஸா கெய்ரோ மாநகரின் ‘கொஸவுன்’ என்ற இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

த;வா பணியில் ஈடுபடுகின்ற நம் எல்லோருக்கும் அல்குர்ஆனைப் போன்று அஹ்லுல் பைத்துக்களும் பிரிக்கப்பட முடியாத சொத்து. அவ்விரண்டையும் பற்றிப் பிடித்தாலன்றி நாம் ஒருபோதும் வெற்றி பெற முடியாது.

எனவே, எல்லா இயக்கத்தினரும் திறந்த மனதோடு அஹ்லுல் பைத்துக்களின் நிழலில் அல்குர்ஆனின் போதனைகளை அணுகி அதன்படி வாழ்ந்து காட்ட திடற்சங்கற்பம் பு‘ண்டு ஒன்றுபட்டு உழைக்க முன்வாருங்கள் என்று எல்லோரையும் அன்புக் கரம் நீட்டி அழைக்கின்றோம்.

அடுத்தபடியாக இந்நூல் வெளியாகத் துணைபுரிந்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்ததாக இப்பிரதியை திருத்தம் செய்த உலமாக்கள், நண்பர்கள் ஆகியோருக்கும், இதை நூலுருவில் கொண்டு வருவதற்கு எல்லா வகையிலும் தமது சிரமங்களைப்பாராது உழைத்த இத்திஹாத் இஸ்லாமிய நட்புறவுச் சங்கத்தினருக்கும், இதனை வெளியிட முன்வந்த அல் முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழக இலங்கைக் கிளையின் பிரதிநிதிக்கும், கையெழுத்தை கணினி மயமாக்கித் தந்த என் அன்பு மனைவிக்கும், இறுதியாக இந்த விஷயத்தில் எல்லா வகையிலும் எனக்கு உதவியாக இருந்த இனிய நண்பர் அபு‘ இம்தாத் மஹ்தி அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்லாஹ், இவர்கள் அனைவருக்கும் அஹ்லுல் பைத்துக்களின் நிழலில் வாழும் பாக்கியத்தையும், உலகில் பொருளாதாரத்தையும் மறுமையில் அருளாதாரத்தையும் வாரி வழங்குவானாக.

நன்றி

நிஸாம்தீன் (மன்பஈ)
mnizamdeen@gmail.com
2014/10/13

## முதலாம் ஹதீத்:

**اخرج سعيد بن منصور في سننه ، عن سعيد بن جبير، في قوله تعالى :قُلْ لاٰ أَسْئَلُكُمْ عَلَيْهِ أَجْراً إِلاَّ اَلْمَوَدَّةَ فِي اَلْقُرْبىٰ قال: قُرْبىٰ رَسُوْلِ اللّٰهِ صَلى اللّه عليه (وآله) و سلمَ.**

ஸயீத் இப்னு மன்சூர்[1] என்பர் தனது 'சுனன்' இல் ஸயீத் இப்னு ஜவூபைர்[2] (ரழி) அவர்களிடமிருந்து '(நபியேயூ) நீர் கூறும் உறவினர்கள் மீது அன்பு கொள்வதைத் தவிர, இதற்காக நான்

---

[1] அபு' உஸ்மான் ஸயீத் இப்னு மன்ஸவூர் இப்னு ஷவூஅபா குராஸானி (தாலிகானி) எனப்படும் இவர், ஜௌஸ்ஜான் என்ற இடத்தில் பிறந்து 'பல்ஹ்' நகரில் வளர்ந்தார். பல இடங்களுக்கும் பிரயாணம் செய்த இவர் இறுதியில் மக்காவில் குடியமர்ந்து ஹி 227 இல் அங்கேயே மரணித்தார். இமாம் முஸ்லிம், இவரிடமிருந்து ஹதீஸ்கள் அறிவித்துள்ளார். அத்துடன் சிஹாஹவூஸ் சித்தாவிலும் இவரினால் அறிவிக்கப்பட்ட பல ஹதீதுகள் காணப்படுகின்றன. இவரின் வாழ்க்கைக் குறிப்பு: தத்கிரதுல் ஹவூப்;பாழ் பாக 1 பக் 416 – 417, தாரிகுல் புஹாரி பாக 2 பக் 472, அல் ஜர்ஹவூ வத் த;தீல் பாக 1 பக் 68, முக்தஸர் தாரீகு டமஸ்க் பாக 6 பக் 175, தஹ்தீபுத் தஹ்தீப் பாக 3 பக் 89-90 ஆகிய நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[2]அபு' முஹம்மத் ஸயீத் இப்னு ஜவூபைர் இப்னு ஹிஷாம் அஸதி வாலிபி ஹி 46 இல் பிறந்து ஹி 95இல் ஹஜ்ஜாஜ் இப்னு யு'ஸவூப் தகபியினால் கொலை செய்யப்பட்டார். இவரைக் கொலை செய்து சில நாட்களுக்குப் பிறகு ஹஜ்ஜாஜ் இறந்தார். இப்னு ஜவூபைர், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் இன்னும் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) ஆகியோரிடத்தில் கல்வி கற்றார். தாபியீன்களில் மிகவும் பாண்டித்தியம் பெற்ற இவர் பழமை வாய்ந்த தேர்ச்சி பெற்ற அல்குர்ஆன் விரிவுரையாளர்களின் வரிசையில் இடம்பிடித்துள்ளார். இவரின் வாழ்க்கை குறிப்பு: தத்கிரதுல் ஹவூப்;பாழ் பாக 1 பக் 76-77, தபகாது இப்னு ஸ;த் பாக 6 பக் 256-257, அல் ஜர்ஹவூ வத் த;தீல் பாக 1 பக் 9, தஹ்தீபுத் தஹ்தீப் பாக 2 பக் 11-14 ஆகிய நூற்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உங்களிடம் யாதொரு கூலியும் கேட்கவில்லை.[3]' என்ற வசனத்தின் விளக்கத்தில் அறிவித்துள்ளதாவது,

இப்னு ஜவூபைர் சொன்னார்: 'قُربى' என்பது நாயகம் (ஸல்) அவர்களின் இனபந்துக்களாகும்.[4]

## இரண்டாம் ஹதீது:

**اخرج ابن المنذر ، و ابن ابي حاتم ،و ابن مردويه ، في تفاسيرهم. و الطبرانيفي المعجم الكبير، عن ابن عباس ، لما نزلت هذه الآية :قُلْ لاٰ أَسْئَلُكُمْ عَلَيْهِ أَجْراً إِلاَّ اَلْمَوَدَّةَ فِي اَلْقُرْبىٰ ، قَالُوا: يا رسولَ اللّهِ مَنْ قَرَابَتُكَ هَؤُلاَءِ الَّذِيْنَ وَجَبَتْ عَلَيْنَا مَوَدَّتُهُمْ؟ قال: عَلِيّ و فَاطِمة ووَلَدَاهُمَا.**

இப்னு முன்திர்[5] இப்னு அபீ ஹாத்தம்[6] இப்னு மர்தவைஹ்[7] ஆகியோர் தமது குர்ஆன் விளக்கவுரை (தப்ஸீர்) நூற்களிலும்

---

[3] சூரத்து ஷவூரா வசனம் 23

[4] சுயு'த்தி, துர்ருல் மன்தூர் பாக 6 பக் 7, ஹிஸ்கானி, ஷவாஹிதுத் தன்ஸீல் பாக 2 பக் 145, ஹாகிம், முஸ்தத்ரகுஸ் சஹீஹைன் பாக 3 பக் 172, இப்னு ஹஜர், அஸ்ஸவாயிகுல் முஹ்ரிகா பக் 136, தபரி, தகாயிருல் உக்பா பக் 9

[5]அபு'பக்ர் முஹம்மத் இப்னு இப்றாஹீம் இப்னு முன்திர் நைஷாபு'ரி எனப்படும் இவர், அல் ஹாபிழ், அல் பகீஹ், முஜ்தஹித் மற்றும் மஸ்ஜிதுல் ஹராமின் இமாமாகும். இவரால் எழுதப்பட்டுள்ள பல நூற்களில்,'அல் மப்ஸவூத் ;பில் பிக்ஹ், அல் இஷ்ரா;ப் ;பீ இஹ்திலா;பில் உலமா, அல் இஜ்மா' ஆகியவை மிகவும் பிரபல்யமானவையாகும். ஹி 243 இல் பிறந்த இவர் ஹி 318 இல் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு, தத்கிரதுல்

தபரானி[8]'அல் மு;ஜமுல் கபீர்' என்ற ஹதீஸ் நூலிலும் இப்னு அப்பாஸ்[9] (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது,

---

ஹவூப்;பாழ் பாக 2 பக் 782-783, தபகாதுஷ் ஷா;பிஇய்யா பாக 2 பக் 102-108, அல் அ;லாம் பாக 6 பக் 184, ஷதராதுத் தஹப் பாக 2 பக் 280 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[6]அபு' முஹம்மத் அப்துர் ரஹ்மான் இப்னு அபீ ஹாத்தம் முஹம்மத் இப்னு இத்ரீஸ் இப்னு முன்திர் தமீமி ஹன்ளலி ராஸி எனப்படும் இவர், ஹி 240இல் 'ரய்' என்ற இடத்தில் பிறந்து ஹி 327இல் அதே இடத்தில் மரணித்தார். அவரது காலத்தில் தேர்ச்சி பெற்ற ஹதீஸ் கலை நிபுணராக விளங்கிய அவர், ஹதீதுகளை தரம் பிரித்து இனங்காணும் கலையை (அல் ஜர்ஹவூ வத் த;தீல்) தனது தந்தையிடமும் இப்னு ஸர்ஆ என்பவரிடமும் கற்றார். பிக்ஹ் துறையிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். கல்வியைத் தேடி மக்கா, டமஸ்கஸ், எகிப்து, இஸ்பஹான் போன்ற பல இடங்களுக்கும் சென்றார். இவரின் வாழ்க்கைக் குறிப்பு, தத்கிரதுல் ஹவூப்;பாழ் பாக 2 பக் 829-832, ஷதராதுத் தஹப் பாக 2 பக் 308-309, தபகாதுஷ் ஷா;பிஇய்யா பாக 2 பக் 324-328, ;பவாதுல் வ;பயாத் பாக 1 பக் 542-543, தபகாதுல் ஹனாபிலா பாக 2 பக் 55, லிஸானுல் மீஸான் பாக 3 பக் 432, மிர்ஆதுல் ஜினான் பாக 2 பக் 289 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[7]அபு'பக்ர் அஹ்மத் இப்னு மூஸா இப்னு மர்தவைஹி இப்னு ;பு'ரிக் இஸ்பஹானி எனப்படும் இவர் 'தப்ஸீர் இப்னு மர்தவைஹ், தாரீக் இப்னு மர்தவைஹ்' ஆகிய நூற்களின் ஆசிரியராவார். அவரது காலத்தின் ஹதீத் கலை நிபுணர்கள், அல்குர்ஆன் விரிவுரையாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் புவியியல் அறிஞர்களின் பட்டியலில் இடம்பிடிக்கும் இவர், ஹி 324 இல் பிறந்து ஹி 410இல் மரணித்தார். இவரது வாழ்க்கை குறிப்பு, தத்கிரதுல் ஹவூப்;பாழ் பாக 2 பக் 1050-1051, அஹ்பாரு இஸ்பஹான் பாக 1 பக் 168, அல் முன்தழம் பாக 7 பக் 294 இல் கூறப்பட்டுள்ளது.

[8]அபுல் காஸிம் சுலைமான் இப்னு அஹ்மத் இப்னு ஐயு'ப் இப்னு மதீர் லஹ்மி ஷாமி தபரானி எனப்படும் இவர், ஹி 260இல் 'உக்கா' என்ற இடத்தில் பிறந்தார். ஹதீதுகளைத்தேடி ஹிஜாஸ், யமன்,ஈரான், அல்ஜீரியா போன்ற இடங்களுக்கு பிரயாணங்களை மேற்கொண்டார். 'அல் மு;ஜமுல்

இப்னு அப்பாஸ் (ரழி) சொன்னார்: ‘(நபியேயூ) நீர் கூறும்யூ உறவினர்கள் மீது அன்பு கொள்வதைத் தவிர, இதற்காக நான் உங்களிடம் யாதொரு கூலியும் கேட்கவில்லை’ என்ற வசனம் அருளப்பட்டபோது நபித்தோழர்கள்,“அல்லாஹ்வின் தூதரேயூ நேசிப்பது கடமையான உமது குடும்பத்தினர் யார்?”

---

கபீர், அல் மு;ஜமுல் முதவஸ்ஸித், அல் மு;ஜமுஸ் சகீர்’ போன்றவை ஹதீத் துறையில் பிரசித்தி பெற்ற அவரது நூற்களாகும். இவர் ஹி 360 இல் தனது நூறாவது வயதில் இஸ்பஹானில் மரணித்தார். இவரின் வாழ்க்கைக் குறிப்பு, தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 3 பக் 912-918, மீஸானுல் இ;திதால் பாக 2 பக் 190, அந்நூஜவூமுஸ் ஸாஹிரா பாக 4 பக் 59, மீஸானுல் இ;திதால் பாக 2 பக் 181, லிஸானுல் மீஸான் பாக 2 பக் 74, திக்ரு அஹ்பாரி இஸ்பஹான் பாக 1 பக் 325 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[9]அபுல் அப்பாஸ் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிப் குறைஷி ஹாஷிமியான இவர், நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தின் மேதையும், எப்போதும் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்த சஹாபாக்களில் ஒருவருமாவார். ஹிஜ்ரத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இவர் பிறந்தார். நபி (ஸல்) அவர்கள் இவருக்காக, மார்க்கத்தின் விளக்கத்தையும், த;வீலையும் கற்றுக் கொடுக்குமாறு இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். சிஹாஹவூஸ் சித்தாவின் அசிரியர்கள் இவரிடமிருந்து 1660 ஹதீதுகளை அறிவித்துள்ளனர். இவர் ஜமல், சி;ப்பீன் யுத்தங்களின் போது இமாம் அலீ (ரழி) அவர்களுடைய தரப்பில் இருந்தார். வரலாற்று ஆசிரியர் வாஹிதியுடைய கூற்றின்படி இவர் ஹி 68இல் தனது 72வது வயதில் மரணித்தார். இவரின் வாழ்க்கைக் குறிப்பு வ;பயாதுல் அ;யான் பாக 3 பக் 62-63, அல் இஸாபா பாக 4 பக் 90-94, ஜவாமிஉஸ் ஸீரா பக் 272, தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 1 பக் 40-41, நிஹாயதுந் நிஹாயா பாக 1 பக் 425, அல் அக்து தமீன் பாக 5 பக் 190, நுகதுல் ஹிமயான் பக் 180, தாரீகு டமஸ்க் பாக 6 பக் 260, அல் அ;லாம் பாக 4 பக் 228, லிஸானுல் மீஸான் பாக 3 பக் 73 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனக்கேட்டதற்கு, நபி (ஸல்) அவர்கள்,“அலீ, பாத்திமாவும் அவர்களின் இரு பிள்ளைகளும்” என பதிலளித்தார்கள்.[10]

## மூன்றாம் ஹதீது

اخرج ابن ابي حاتم، عن ابن عباس، في قوله تعالى :وَ مَنْ يَقْتَرِفْ حَسَنَةً ، قال: اَلْمَوَدَّةُ لِآلِ مُحَمَّدٍ.

‘எவர் ஒரு நன்மை செய்கிறாரோ’ (42:23) என்ற வசனத்தின் விளக்கத்தில் இப்னு அபீ ஹாத்தம், இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது:

இப்னு அப்பாஸ் (ரழி) சொன்னார்கள்: “அதன் நோக்கம் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தை நேசிப்பதாகும்”.[11]

---

[10]அல் ஜாமிஉ லி அஹ்காமில் குர்ஆன் பாக 8 பக் 21, அத்தப்ஸீருல் கபீர் பாக 27 பக் 166, அல் மு;ஜமுல் கபீர் பாக 3 பக் 47, பாக 11 பக் 351, மஜ்மஉஸ் ஜவாயித் பாக 9 பக் 168, பாக 7 பக் 103, அத்துர்ருல் மன்தூர் பாக 5 பக் 701, கஷ்ஷா;ப் பாக 2 பக் 339, இஸ்காபுர் ராகிபீன் பக் 205, இர்ஷாதுல் அக்லிஸ் சலீம் பாக 1 பக் 665, ஹில்யதுல் அவ்லியா பாக 3 பக் 201, முஸ்னத் அஹ்மத் பாக 1 பக் 229, ஷவாஹிதுத் தன்ஸீல் பாக 2 பக் 30,150, தப்ஸீர் தபரி பாக 25 பக் 17, தப்ஸீர் இப்னு கதீர் பாக 4 பக் 112, அஸ்ஸவாயிக் பக் 101, யனாபீஉல் மவத்தா பக் 268

[11]அத்துர்ருல் மன்தூர் பாக 6 பக் 7, கஷ்ஷா;ப் பாக 3 பக் 468, அல் ;புஸவூலுல் முஹிம்மா பக் 29, அல் ஜாமிஉ லி அஹ்காமில் குர்ஆன் பாக 8 பக் 24, ஸம்ஹவூதி, ஜவாஹிருல் அக்தைன் பாக 2 பக் 13

## நான்காம் ஹதீது

**اخرج احمد ، و الترّمذي و صححه،و النسائي ، و الحاكم ، عن المطلب بن ربيعة ، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: لَا يَدْخُلُ قَلْبَ امْرَئٍ مُسْلِمٍ اِيْمَانٌ حَتّٰى يُحِبَّكُمْلِلّٰهِ وَ لِقَرَابَتِي .**

முத்தலிப் இப்னு ரபீஆ[12] (ரழி) அவரிடமிருந்து அஹ்மத்[13], திர்மிதி[14], நஸாஈ[15] மற்றும் ஹாக்கிம்[16] ஆகியோர்

---

[12] முத்தலிப் இப்னு ரபீஆ இப்னு ஹர்த் இப்னு அப்துல் முத்தலிப் இப்னு ஹாஷிம் எனப்படும் இவர், ரபீஆ இப்னு ஹர்த் மற்றும் உம்முல் ஹகம் பின்த் சுபைர் இப்னு அப்துல் முத்தலிப் ஆகியோரின் மகனாவார். நபி (ஸல்) அவர்களிடமிருந்தும் அலீ (அலை) அவர்களிடமிருந்தும் ஹதீதுகளை அறிவித்துள்ளார். இவரிடமிருந்து அவர் பிள்ளையான அப்துல்லாஹ், அப்துல்லாஹ் இப்னு ஹர்த் இப்னு நௌபல் போன்றோர் ஹதீது அறிவிப்புச் செய்துள்ளனர். பரம்பரைகளை அறியும் திறமையுடைய (அன்ஸாப்) அறிஞர்கள் இவரை முத்தலிப் எனவும் குறிப்பிட்டுள்ளனர். மதீனாவிலும் பின் ஷாம் தேசத்திலும் வாழ்ந்த இவர் ஹி 62இல் மரணித்தார். இவரின் வாழ்க்கைக் குறிப்பு அல் இஸாபா பாக 4 பக் 190-191, பாக 6 பக் 104, அல் இஸ்தீஆப் பாக 3 பக் 413 இல் கூறப்பட்டுள்ளது.

[13]அபு' அப்தில்லஹ் அஹ்மத் இப்னு முஹம்மத் இப்னு ஹன்பல் இப்னு ஹிலால் தஹலி ஷைபானி மிர்வஸி பக்தாதி எனப்படும் இவர் ஹி 164இல் பிறந்து ஹி 241இல் தனது 77 வது வயதில் பக்தாதில் மரணித்தார். ஹன்பலி மத்ஹபின் இமாமான இவர் மிகப்பெரும் மனன சக்தியுடையவரும் ஹதீஸ் கலை நிபுணருமாகும். ஒரு மில்லியன் ஹதீதுகளை மனனம் செய்திருந்தார். 'அல் முஸ்னத்' என்ற ஹதீத் கிரந்தம் அவரின் முக்கிமான நூற்களில் ஒன்றாகும். இவரின் வாழ்க்கை குறிப்பு ஷதராதுத் தஹப் பாக 2 பக் 96-98, தத்கிரதுல் ஹவு;ப்;பாழ் பாக 2 பக் 441-442 போன்ற நூற்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[14] அபு' ஈஸா முஹம்மத் இப்னு ஈஸா இப்னு சூரத் இப்னு மூஸா இப்னு ளஹ்ஹாக் ஸில்மி திர்மிதி எனப்படும் இவர், கண்பார்வையற்ற அறிஞரும் ஹதீதுகலை நிபுணரும் இமாம் புஹாரியின் மாணவருமாகும். ஹி 210 இல்

பிறந்து ஹி 279இல் திர்மிதி என்ற நகரில் மரணித்தார். அறிவைத்தேடி இராக், குராஸான் மற்றும் ஹிஜாஸ் போன்ற நகரங்களுக்கும் சென்றார். 'அல் ஜாமிஉஸ் சஹீஹ்', 'அல் இலல்' ஆகியவை இவரின் முக்கிய நூற்களில் அடங்கும். இவரின் வாழ்க்கை குறிப்பு ஷதராதுத் தஹப் பாக 2 பக் 174-175, தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 2 பக் 433-435, வ;பயாதுல் அ;யான் பாக 1 பக் 612, மீஸானுல் இ;திதால் பாக 3 பக் 117, லுபாப் இப்னு அதீர் பாக 1 பக் 174, மிர்ஆதுல் ஜினான் பாக 2 பக் 193, அந்நுஜவூமுஷ் ஷாஹிரா பாக 1 பக் 71, தஹ்தீபுத் தஹ்தீப் பாக 9 பக் 387 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

[15]அபு' அப்திர் ரஹ்மான் அஹ்மத் இப்னு சுஐப் இப்னு அலீ இப்னு ஸிஸான் இப்னு பஹ்ர் அந்நஸாஈ எனப்படும் இவர் ஹி 215 இல் நஸா (குராஸான் மாநிலத்தின் ஒரு நகரம்) என்ற இடத்தில் பிறந்தார். குராஸான் மாநிலத்தின் அறிஞர்களில் ஒருவராக இருந்த இவர், இராக், ஹிஜாஸ், ஷாம் எகிப்து போன்ற இடங்களுக்கு ஹதீதுகளைக் கேட்பதற்காக சென்றுள்ளார். ஹதீத் கலையில் தேர்ச்சி பெற்ற அறிஞரான இவர் ஆரம்பத்தில் எகிப்தில் வாழ்ந்து பின்பு டமஸ்கஸில் குடி புகுந்தார். ஹி 303 இல் தனது 88வது வயதில் பலஸ்தீனில் மரணித்தார். இவரது உடல் மக்காவுக்கு கொண்டுவரப்பட்டு அங்கே நல்லடக்கம் செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது. இவரிடமிருந்து நமக்கு கிடைத்துள்ள நூற்களில் முக்கியமானவையாக 'அஸ்சுனன்', 'அல் ஹஸாயிஸ்' போன்றவற்றை குறிப்பிடலாம். இவரின் வாழ்க்கை குறிப்பு தபகாத்துஷ் ஷா;பியிய்யா பாக 3 பக் 14-16, வ;பயாதுல் அ;யான் பாக 1 பக் 25, ஸதராத்துத் தஹப் பாக 2 பக் 239-241, தஹ்தீபுத் தஹ்தீப் பாக 10 பக் 36, மிர்ஆதுல் ஜினான் பாக 2 பக் 24 போன்ற கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[16] ஹாகிம் அபு' அப்தில்லாஹ் முஹம்மத் இப்னு முஹம்மத் இப்னு ஹம்த்வைஹி இப்னு நயீம் தஹ்மானி நைஷாபு'ரி ஹி 321 இல் பிறந்தார். தனது 20வது வயதில் இராக்கிற்கு சென்ற இவர் பின்பு அறிவைத்தேடி குராஸான் மற்றும் தூர கிழக்குப் பிரதேசங்களுக்கும் சென்றார். நஸா நகரில் காழியாக (நீதிபதியாக) இருந்து சிலகாலம் கழிந்தபின் அதை இராஜினாமா செய்தார். தொடர்ச்சியாக ஆலபுவைஹிகளின் அவையில் முக்கிய பதவிகளை வகித்த இவர் ஹதீது துறையில் தனிச் சிறப்புப் பெற்றுத் திழந்தார். இதன் காரணமாக தாரு குத்னி, பைஹகி போன்ற பெரும்பெரும் ஹதீது கலை நிபுணர்கள் இவரிடமிருந்து ஹதீஸ் அறிவிப்புச் செய்துள்ளனர். இவரின் முக்கியமான கிரந்தங்களுல் 'முஸ்தத்ரகுஸ் சஹீஹைன்', 'அல் மத்ஹலு

அறிவித்துள்ளதாவது: நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘அல்லாஹவுக்காகவும் எனது குடும்பம் என்பதற்காகவும் உங்களை நேசிக்கின்ற வரை முஸ்லிமான ஒருவரின் உள்ளத்தில் ஈமான் நுழைய மாட்டாது’’.[17]

## ஐந்தாம் ஹதீது

**اخرج مسلم ، و الترمذي، و النسائي، عن زيد بن أرقم، ان رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم، قال: أُذَكِّرُكُمُ اللّٰهَ فِي اَهْلِ بَيْتِي**

ஸைத் இப்னு அர்கம்[18] (ரழி) அவர்களிடமிருந்து முஸ்லிம்[19], திர்மிதி, நஸாயீ ஆகியோர் அறிவித்துள்ளதாவது, நாயகம்

---

இலல் இல்மிஸ் சஹீஹ்’ போன்றவை அடங்கும். கல்விக்காக பல பிரதேசங்களுக்கும் சென்று கற்று முக்கிய பதவிகளை வகித்த இவர் ஹி 405இல் மரணித்தார். இவரின் வாழ்க்கைக் குறிப்பு தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 3 பக் 1045-1049, வ;பயாதுல் அ;யான் பாக 4 பக் 408, அ;லாமுல் முஹத்திதீன் பக் 324 போன்ற கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[17] முஸ்னத் அஹ்மத் பாக 1 பக் 342, பாக 5 பக் 172, திர்மிதி பாக 5 பக் 610, நஸாயீ பாக 5 பக் 51, அல் முஸ்தத்ரக் பாக 4 பக் 85, அத்துர்ருல் மன்தூர் பாக 6 பக் 7, தஹாயிருல் உக்பா பக் 29, கன்ஸவூல் உம்மால் பாக 6 பக் 218, பாக 7 பக் 102, மிஷ்காதுல் மஸாபீஹ் பாக 3 பக் 258-259.

[18] ஷைத் இப்னு அர்கம் இப்னு ஷைத், அன்ஸாரியான இவர் கஸ்ரஜி குலத்தைச் சேர்ந்தவராகும். வரலாற்று ஆசிரியர் தஹபியுடைய கூற்றின்படி, பைஅது ரிழ்வானில் கலந்து கொண்டவர்களில் ஒருவராக இருந்த இவர் 17 யுத்தங்களில் கலந்து கொண்டார். அத்துடன் சி;ப்;பீன் யுத்தத்தின் போது இமாம் அலீயுடைய தரப்பில் களமிறங்கினார். ஷைத் ஹி 66இல் முஹ்தாருடைய காலப்பகுதியில் கூபாவில் மரணித்தார். இவரது வாழ்க்கை

(ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ''எனது குடும்பத்தினரின் (அஹ்லுல் பைத்துக்களின்) விடயத்தில் உங்களுக்கு அல்லாஹ்வை ஞாபக மூட்டுகிறேன்''.[20]

## ஆறாம் ஹதீது

اخرج الترمذي و حسنه، و الحاكم، عن زيد بن أرقم، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اِنِّي تَارِكٌ فِيْكُمْ مَا اِنْ تَمَسَّكْتُمْ بِهِ لَنْ تَضِلُّوا بَعْدِي، كِتَابَ اللّٰهِ، وَ عِتْرَتِي اَهْلَ بَيْتِي، وَ لَنْ يَتَفَرَّقَا حَتّٰى يَرِدَا عَلَيَّ الْحَوْضَ، فَانْظُرُوا كَيْفَ تُخْلِفُوْنِي فِيْهِمَا.

ஸைத் இப்னு அர்கம் (ரழி) அவர்களிடமிருந்து திர்மிதி மற்றும் ஹாக்கிம் ஆகியோர் அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

---

குறிப்பு தத்கிரதுல் ஹவு;ப்;பாழ் பாக 1 பக் 45, அல் இஸாபா பாக 3 பக் 21, அல் இஸ்தீஆப் பாக 1 பக் 566,578 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

[19] அபுல் ஹஸன் முஸ்லிம் இப்னு ஹஜ்ஜாஜ் குஷைரி நைஷாபு'ரி ஹி 202 (அல்லது 206) இல் பிறந்தார். பல தடவைகள் பக்தாதுக்கு பயணம் செய்த இவர் ஹி 261இல் நைஷாபு'ரிலுள்ள நஸ்ராபாத் என்ற கிராமத்தில் மரணித்தார். இவர் மார்க்க சட்டத்துறையிலும், ஹதீது கலையிலும் பெயர் பெற்றவர். இவரின் நூற்களில் மிகவும் பிரபல்யமானவை 'அல் ஜாமிஉஸ் சஹீஹ்' எனப்படும் ஹதீது கிரந்தமாகும். இவரது வாழ்க்கை குறிப்பு தத்கிரதுல் ஹவு;ப்;பாழ் பாக 2 பக் 150, தபகாதுல் ஹனாபிலா பக் 246, மிர்ஆதுல் ஜினான் பாக 2 பக் 174 , வ;பயாதுல் அ;யான் பாக 2 பக் 119, தாரீகு பக்தாத் பாக 3 பக் 14-100, புஸ்தானுல் முஹத்திதீன் பக் 104 போன்ற நூற்களில் கூறப்பட்டுள்ளது.

[20] முஸ்லிம் பாக 4 பக் 1873, நஸாயீ பாக 2 பக் 51, அஹ்மத் பாக 5 பக் 492 சஹீஹ் இப்னு ஹவுஸைமா பாக 4 பக் 62

“நான் உங்கள் மத்தியில் பெறுமதிமிக்க இரு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். அவற்றைப் பற்றிப்பிடித்திருக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவறவே மாட்டீர்கள். (அவை) அல்லாஹ்வின் வேதமும் எனது குடும்பமான அஹ்லுல் பைத்துக்களுமாகும். அவை இரண்டும் ஹவ்ழுல் கவ்ஸரில் என்னிடம் வரும்வரை ஒன்றைவிட்டு ஒன்று பிரியவே மாட்டா. எனவே அவ்விரண்டுடனும் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள்”.[21]

## ஏழாம் ஹதீது

**اخرج عبد بن حميد، في مسنده، عن زيد بن ثابت ، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اِنِّي تَارِكٌ فِيْكُمْ مَا اِنْ تَمَسَّكْتُمْ بِهِ بَعْدِي لَنْ تَضِلُّوا، كِتَابَ اللّٰهِ وَ عِتْرَتِي أَهْلَ بَيْتِي، اِنَّهُمَا لَنْ يَتَفَرَّقَا حَتّٰى يَرِدَا عَلَيَّ الْحَوْضَ.**

அப்து இப்னு ஹுமைத்[22] என்பவர் தனது ‘முஸ்னத்’கிரந்தத்தில் ஸைத் இப்னு தாபித் (ரழி)[23] அவர்களிடமிருந்து

[21] திர்மிதி பாக 5 பக் 622, அல் முஸ்தத்ரக் பாக 3 பக் 160

[22] அபு‘ முஹம்மத் இப்னு அப்து இப்னு ஹுமைத் இப்னு நஸ்ர் கஷி எனப்படும் இவர் ஸமர்ந்தின் கஷி என்ற சிற்றூரைச் சேர்ந்தவர். இவர் அப்துர் ரஸ்ஸாக் இப்னு ஹுமாம், அபு‘தாவு‘த் தயாலிஸி போன்றவர்களிடமிருந்து ஹதீஸ் அறிவிப்புச் செய்துள்ளார். புஹாரி, முஸ்லிம், திர்மிதி ஆகிய கிரந்தங்களிலும் இவர் மூலம் அறிவிப்புச் செய்யப்பட்ட ஹதீதுகள் இடம்பெற்றுள்ளன. மிகவும் நம்பகமானவராக திகழ்ந்து அறிஞர்களின் பட்டியலில் இடம் பிடித்தார். ஹதீத் மற்றும் தப்ஸீர் துறையில் பல நூற்களை எழுதிய இவர் ஹி 249இல் மரணித்தார். இவரைப் பற்றிய குறிப்பு தஹ்தீபுத் தஹ்தீப் பாக 6 பக் 455-457, ரிஜாலு கைஸரானி பக் 337, ஷதராதுத் தஹப் பாக 2 பக் 120, தத்கிரதுல் ஹுப்;பாழ் பாக 2 பக் 534, இமாம் சுயு‘தின்

அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘உங்கள் மத்தியில் பெறுமதிமிக்க இரு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். எனக்குப் பிறகு அவற்றை பற்றிப்பிடித்திருக்கும் காலமெல்லாம் நீங்கள் வழி தவறவே மாட்டீர்கள். ஒன்று இறைவேதம் மற்றையது எனது குடும்பமான அஹ்லுல் பைத்துக்கள். ஹவ்ழுல் கவ்ஸரில் என்னிடத்தில் வரும்வரை அவை இரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியவே மாட்டாது’’.[24]

## எட்டாம் ஹதீது

اخرج احمد، و ابو يعلى ، عن ابي سعيد الخدري، ان رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم قال: اِنِّي اُوْشِكُ اَنْ اُدْعِىَ فَاُجِيْبَ، وَ اِنِّي تَارِكٌ فِيْكُمُ الثَّقَلَيْنِ، كَتَابَ اللّٰهِ وَ عِتْرَتِي أَهْلَ بَيْتِي، وَ اِنَّ اللَّطِيْفَ الْخَبِيْرَ خَبَّرَنِي اَنَّهُمَا لَنْ يَتَفَرَّقَا حَتّٰى يَرِدَا عَلَيَّ الْحَوْضَ، فَانْظُرُوا كَيْفَ تُخْلِفُونِي فِيْهِمَا

---

தபகாதுல் ஹவூ;ப்;பாழ் பாக 2 பக் 4 போன்றவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[23] அபு‘ஸயீத் ஷைத் இப்னு தாபித் இப்னு ளஹ்ஹாக் அன்ஸாரியான இவர் கஸ்ரஜி கோத்திரத்தைச் சேர்ந்தவர். வஹி எழுதுபவர்களில் ஒருவராக இருந்த இவர் ஹி 45இல் மரணித்தார். இவரது வாழ்க்கைக் குறிப்பு அல் இஸாபா பாக 1 பக் 561-562, அல் இஸ்தீஆப் பாக 1 பக் 551-554, தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 3 பக் 22-23 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[24] அல் முஸ்னத் பாக 6 பக் 232, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 162, முஸன்ன;ப் அபீ ஷைபா பாக 6 பக் 313, ;பஸவி, அல் ம;ரி;பது வத் தாரீக் பாக 9 பக் 537, கன்சுல் உம்மால் பாக 1 பக் 166, அல் அக்துல் ;பரீத் பாக 2 பக் 111

அபு' ய;லா[25] என்பவர் அபு' ஸயீத் அல் குத்ரி[26] (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"என்னை மரணம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அவ்வாறு அழைக்கப்பட்டால் அதற்கு நான் பதிலளிக்க வேண்டும். எனவே, உங்கள் மத்தியில் பெறுமதிமிக்க இரண்டு விடயங்களை விட்டுச் செல்கிறேன். ஒன்று இறைவேதம் மற்றையது எனது குடும்பமான அஹ்லுல் பைத்தாகும். இறைவன் எனக்கு அறிவித்துள்ளதன் பிரகாரம் அவை இரண்டும் ஹவ்ழுல் கவ்ஸரில் என்னிடத்தில் வரும்வரை ஒன்றை விட்டு ஒன்று பிரியமாட்டா. எனவே,எனக்குப்

---

[25] ஹாபிழ் அபு' ய;லா அஹ்மத் இப்னு அலீ இப்னு முதன்னா இப்னு யஹ்யா இப்னு ஈஸா இப்னு ஹிலால் தமீமி மூஸிலி எனப்படும் இவர் அல்ஜெஸீரா பிரதேசத்தில் ஹதீஸ் கலை நிபுணராகும். ஹி 210 ஷவ்வால் மாதம் மூஸில் நகரில் பிறந்த இவர், அஹ்மத் இப்னு ஹாத்தம் தவீல், யஹ்யா இப்னு மயீன் போன்றவர்களிடம் ஹதீஸ் கலையை கற்றார். 'அல் முஸ்னத் அல் கபீர்' என்பது இவரின் பிரபல்யமான கிரந்தமாகும். இவரைப் பற்றிய குறிப்பு மு;ஜமுல் புல்தான் பாக 5 பக் 225, ஷதராதுத் தஹப் பாக 2 பக் 250, தத்கிரதுல் ஹவு;ப்;பாழ் பாக 2 பக் 707-709 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[26] அபு' ஸயீத் ஸ;த் இப்னு மாலிக் இப்னு சினான் இப்னு உபைத் அன்ஸாரி, கஸ்ரஜி கோத்திரத்தைச் சேர்ந்த இவர் ஹிஜ்ரத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தார். 'பைஅதுஷ் ஷஜரா'வில் கலந்து கொண்டவர்களுல் இவரும் ஒருவர். சஹாபா அறிஞர்களின் பட்டியலில் இடம் பிடிக்கும் இவர் 12 யுத்தங்களில் கலந்து கொண்டுள்ளார். இவரது தந்தையும் உஹது யுத்தத்தில் ஷஹீதானது குறிப்பிடத்தக்கது. ஹி 72 இல் மதினாவில் மரணித்த இவரிடமிருந்து சஹீஹவுல் புஹாரியில் 16 ஹதீதுகளும் சஹீஹவுல் முஸ்லிமில் 52 ஹதீகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. அவரின் வாழ்க்கைக் குறிப்பு ஹில்யதுல் அவ்லியா பாக 1 பக் 299, அல் இஸாபா பாக 2 பக் 85-86, அல் இஸ்தீஆப் பாக 4 பக் 89, தத்கிரதுல் ஹவு;ப்;பாழ் பாக 1 பக் 44 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிறகு அவற்றுடன் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்பதை கவனித்துக் கொள்ளுங்கள்''.[27]

## ஒன்பதாம் ஹதீது

**اخرج الترمذي و حسنه، و الطبراني، عن ابن عباس قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اَحِبُّوا اللّٰهَ لِمَا يَغْذُوكُمْ بِهِ مِنْ نِعَمِهِ، وَ اَحِبُّونِي لِحُبِّ اللّهِ، وَ اَحِبُّوا اَهْلَ بَيْتِي لِحُبِّي.**

திர்மிதி, தபரானி, ஹாகிம் ஆகியோர் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ''இறைவனது அருட் கொடைகளை அனுபவிப்பதற்காக அவனை நேசியுங்கள். இறைநேசத்திற்காக என்னை நேசியுங்கள், மேலும் என்னை நேசித்ததற்காக வேண்டி எனது குடும்பத்தை நேசியுங்கள்''.[28]

[27] அல் முஸ்னத் பாக 3 பக் 393, அபு' ய;லா பாக 2 பக் 6,9,74, மு;ஜமு தபரானி பாக 1 பக் 129, கன்சுல் உம்மால் பாக 1 பக் 167-168, தபகாது இப்னு ஸ;த் பாக 2 பக் 194, தகாயிருல் உக்பா பக் 16.

[28] திர்மிதி பாக 5 பக் 622, மு;ஜமுல் கபீர் தபரானி பாக 3 பக் 46, அல் முஸ்தத்ரகுல் ஹாகிம் பாக 3 பக் 162, பைஹகி பாக 2 பக் 130, ஜவாஹிருல் அக்தைன் பாக 2 பக் 228, துர்ருல் மன்தூர் பாக 6 பக் 7, கன்சுல் உம்மால் பாக 6 பக் 316, ஜாமிஉல் உஸவூல் இப்னு அதீர் பாக 9 பக் 154, தகாயிருல் உக்பா பக் 18, முஸ்தத்ரகுஸ் சஹீஹைன் பாக 3 பக் 150, மீஸானுல் இ;திதால் பாக 2 பக் 43, தாரீகு பக்தாத் பாக 4 பக் 159, உஸ்துல் காபா பாக 2 பக் 12, மிஷ்காத் பக் 573, யனாபீஉல் மவத்தா பக் 192, 271.

## பத்தாம் ஹதீது

اخرج البخاري، عن ابي بكر الصديق (رض) قال: اِرْقَبُوا مُحَمَّدًا– صلى اللّه عليه (وآله) و سلم–فِي أَهْلِ بَيْتِهِ.

இமாம் புஹாரி[29] அபு'பக்கர்[30] (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, அவர் சொன்னார்:

"நாயகத்தின் குடும்பத்தினர் விடயத்தில் (நபிகளாரின் உரிமைகளைப் பாதுகாப்பதில்) மிகவும் கவனமாக இருந்து கொள்ளுங்கள்".[31]

---

[29] அபு' அப்தில்லாஹ் முஹம்மத் இப்னு இஸ்மாயீல் இப்னு இப்ராஹீம் இப்னு முகீரா இப்னு பொர்ஸவைஹ் எனப்படும் 'அல் ஜாமிஉஸ் சஹீஹ்' என்ற கிரந்தத்தின் ஆசிரியரான இவர் ஹி 194 இல் புஹாரா என்ற இடத்தில் பிறந்து ஹி 256இல் சமர்கந்தின் 'கர்தனக்' எனும் கிராமத்தில் மரணித்தார். இவரின் வாழ்க்கைக் குறிப்பு தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 2 பக் 555-557, தாரீகு பக்தாதி பாக 2 பக் 4-16, அல் ஜர்ஹவூ வத் த;தீல் பாக 3 பக் 191, வ;பயாதுல் அ;யான் பாக 1 பக் 576, ஷதராதுத் தஹப் பாக 2 பக் 134, ஜாமஉல் உஸவூல் பாக 1 பக் 185-186 போன்றதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[30]அபு'பக்ர் அப்துல்லாஹ் இப்னு உதுமான் குரஷி தமீமி, நாயகத்தின் தோழர்களில் ஒருவரான இவர், அவர்களின் குகைத் தோழராகும். ஜாஹிலிய்யா காலத்தில் இவரின் பெயர் அப்துல் உஸ்ஸா அல்லது அப்துல் லாத் என்றிருந்தது. இஸ்லாத்தை ஏற்றபின் அப்துல்லாஹ் என அழைக்கப்பட்டார். நாயகத்தின் மரணத்தைத் தொடர்ந்து முஸ்லிம்களின் முதலாவது கலீபாவானார். இவரின் ஆட்சிக் காலத்திலே இராக் மற்றும் பலஸ்தீனின் சில பகுதிகள் வெற்றி கொள்ளப்பட்டன. இரண்டு வருடமும் சில மாதங்களும் ஆட்சி செய்த பின் ஹி 13ம் ஆண்டு தனது 63வது வயதில் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு அல் இஸாபா பாக 4 பக் 97-104, தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 1 பக் 2-5 போன்ற நூற்களில் கூறப்பட்டுள்ளது.

[31]அல் ஜாமிஉஸ் சஹீஹ் புஹாரி பாக 3 பக் 251, தகாயிருல் உக்பா பக் 18, கன்சுல் உம்மால் பாக 7 பக் 106, அஸ்ஸவாயிகுல் முஹ்ரிகா பக் 228, துர்ருல் மன்தூர் பாக 6 பக் 7

## பதினோராம் ஹதீது

اخرج الطبراني، و الحاكم، عن ابن عباس، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: يَا بَنِي عَبْدِ الْمُطَّلِبِ اِنِّي قَدْ سَأَلْتُ اللّٰهَ لَكُمْ ثَلَاثًا، اَنْ يُثَبِّتَ قُلُوبَكُمْ وَ اَنْ يُعَلِّمَ جَاهِلَكُمْ، وَ يَهْدِي ضَالَّكُمْ، وَ سَأَلْتُهُ اَنْ يَجْعَلَكُمْ جُوْدَاءَ نُجَدَاءَ رُحَمَاءَ، فَلَوْ اَنَّ رَجُلًا صَفَنَ بَيْنَ الرُّكْنِ وَ الْمَقَامِ فَصَلَّى وَ صَامَ ثُمَّ مَاتَ وَ هُوَ مُبْغِضٌ لِأَهْلِ بَيْتِ مُحَمَّدٍ دَخَلَ النَّارَ.

தபரானி, ஹாகிம் ஆகியோர் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

‘‘அப்துல் முத்தலிபின் மக்களேயூ நான் உங்களுக்காக இறைவனிடத்தில் மூன்று விடயங்களை - உமது உள்ளங்களை உறுதிப்படுத்துமாறும், உங்களில் அறியாதவருக்கு கல்வி ஞானத்தை கொடுக்குமாறும், உங்களில் வழிதவறியோருக்கு நேர்வழி காட்டுமாறும் - வேண்டியுள்ளேன். மேலும் உங்களை தாராளத் தன்மை உடையவர்களாகவும், தைரியமிக்கவர்களாகவும், இரக்கமனம் கொண்டவர்களாகவும் ஆக்குமாறும் வேண்டியுள்ளேன். எனவே, உங்களில் ஒருவர் ருகுனுக்கும் மகாமுக்கும் இடையில் நின்று தொழுது, நோன்பு நோற்று, (தனது வாழ்நாள் முழுவதையும் அதற்காகச் செலவு

செய்து) பின் நாயகம் (ஸல்) அவர்களது குடும்பத்துடன் வெறுப்புக் கொண்டு மரணித்தால் அவர் நரகம் நுழைவார்''.[32]

## பன்னிரண்டாம் ஹதீது

**اخرج الطبراني، عن ابن عباس، ان رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم قال:**

**بُغْضُ بَنِي هَاشِمٍ وَ الْاَنْصَارِ كُفْرٌ، وَ بُغْضُ الْعَرَبِ نِفَاقٌ.**

தபரானி இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

''பனூ ஹாஷிம்களுடனும்[33] அன்ஸாரிகளுடனும் விரோதம் கொள்வது கு;ப்ர் ஆகும். அறபிகளுடன் விரோதம் கொள்வது நயவஞ்சகமாகும்''.[34]

---

[32]அல்மு;ஜமுல் கபீர் தபரானி பாக 11 பக் 142, அல் முஸ்தத்ரக் பாக 3 பக் 161, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 171, கன்சுல் உம்மால் பாக 6 பக் 203, தாரீகு பக்தாத் பாக 3 பக் 122, அஸ்ஸவாயிகுல் முஹ்ரிகா பக் 140

[33]இந்த ஹதீது சஹீஹ் என்பதா? என்று சந்தேகத்துடனே நோக்கவேண்டியுள்ளது. ஏனெனில் அல்குர்ஆனில் மனிதர்களின் கௌரவத்திற்கு காரணம் அவனது 'தக்வா' என தெளிவாக கூறப்பட்டுள்ளது. அத்துடன் நாயகம் (ஸல்) அவர்கள் அறபிகளுக்கும் அஜமிகளுக்கும், குறைஷிகளுக்கும் ஹபஷிகளுக்கும் மத்தியில் இறையச்சத்தின் மூலமாகவே அன்றி வேறு சிறப்பு எதுவும் கிடையாது என பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார்கள். பெரும்பாலும் குலவாதம் (الشعوبية) தலைவிரித்தாடிய காலப்பகுதியில் இது புணையப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. அத்துடன் அல்குர்ஆனில் பகிரங்கமாக கூறப்பட்டுள்ளதின் பிரகாரம் அபு'லகப் இறை சன்னிதானத்திலிருந்து தூக்கி எறியப்பட்டு நரகில் வேதனை செய்யப்படும் ஒருவன். இவனும் பனூ ஹாஷிம்களில் முக்கியமான தலைவர்களில் ஒருவனாகும். ஆனால் அஹ்லுல் பைத்துகள் பெற்றிருக்கும் கண்ணியமும் சிறப்பும் அவர்கள் ஹாஷிமிய்யாக்கள் என்பதானால் அல்ல. மாறாக அவர்கள் தனிநபர் ஒவ்வொருவரும் பெற்றிந்த சங்கைகளுக்காகவும் தகுதிகளுக்காகவுமாகும். (மொழி பெயர்த்தோன்)

## பதின் மூன்றாம் ஹதீது

اخرج ابن عديفي الاكليل، عن ابي سعيد الخدري قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: مَنْ اَبْغَضَنَا اَهْلَ الْبَيْتِ فَهُوَ مُنَافِقٌ.

இப்னு உதைய்[35] அபு‘ ஸயீத் அல் குத்ரி (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘அஹ்லுல் பைத்துக்களான எங்களுடன் விரோதம் கொள்பவன் ‘முனாபிக்’ நயவஞ்சகனாவான்’’.[36]

---

[34]அல் மு;ஜமுல் கபீர் பாக 11 பக் 118, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 2 பக் 172, கன்சுல் உம்மால் பாக 6 பக் 204

[35]இப்னு கத்தான் என அறியப்படும் அபு‘ அஹ்மத் அப்துல்லாஹ் இப்னு உதைய் ஜொர்ஜானி எனப்படும் இவர் ஹி 277 ஜோர்ஜியாவில் பிறந்து ஹி 365இல் மரணித்தார். ஹதீஸ் கலை, பிக்ஹ் துறை மற்றும் ஹதீத் அறிவிப்பாளர்கள் பற்றிய துறையில் நிபுணத்துவம் பெற்று விளங்கினார். அறிவைத்தேடி பல இடங்களுக்கும் சென்று கற்றுத்தேர்ந்த இப்னு கத்தான் பல நூற்களையும் யாத்துள்ளார். ‘அல் காமில், அல் மு;ஜம், அல் இன்திஸார், அஸ்மாஉஸ் ஸஹாபா’ போன்றவை அவற்றுள் முக்கியமானவை. அவரது வாழ்க்கை குறிப்பு தத்கிரதுல் ஹவ்ப்;பாழ் பாக 3 பக் 940, லிஸானுல் மீஸான் பாக 1 பக் 6, அல்லுபாப் பாக 1 பக் 219, ஷதராதுத் தஹப் பாக 3 பக் 51 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[36]ஸம்ஹவுதி, ஜவாஹிருல் அக்தைன் பாக 2 பக் 250, முஹிப்புத்தீன் தபரி, தகாயிருல் உக்பா பக் 180, மனாவி, குனூசுல் ஹகாயிக் பக் 134, அத்துர்ருல் மன்தூர் பாக 6 பக் 7 யனாபீஉல் மவத்தா பக் 47

## பதினான்காம் ஹதீது

اخرج ابن حبانفي صحيحه، و الحاكم، عن ابي سعيد ، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: وَ الَّذِي نَفْسِي بِيَدِهِ لَا يَبْغَضُنَا اَهْلَ الْبَيْتِ رَجُلٌ إِلاَّ اَدْخَلَهُ اللّٰهُ النَّارَ

இப்னு ஹிப்பான்[37] தனது சஹீஹிலும் ஹாகிம் நைஷாபு'ரி, அபு' ஸயீத் அல் குத்ரி (ரழி) அவர்களிடமிருந்தும் அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ''அஹ்லுல் பைத்தான எங்களுடன் விரோதம் கொள்பவரை அல்லாஹ் நரகில் நுழைவிப்பான்''.[38]

---

[37]அபு'ஹாத்தம் முஹம்மத் இப்னு ஹிப்பான் இப்னு அஹ்மத் இப்னு ஹிப்பான் தமீமி பஸ்தி ஹி 270இல் பிறந்தார். அவர் பிக்ஹ், ஹதீத், வைத்தியம், மொழியியல் மற்றும் வானியில் சாஸ்திரம் சார்ந்த துறைகளில் பாண்டித்தியம் பெற்று திகழ்ந்தார். சமர்ந்த் நகரின் நீதிபதியாக இருந்த இவர் பல நூற்களையும் எழுதியுள்ளார். அவற்றுல் 'அல் முஸ்னதுஸ் ஸஹீஹ், அத்தாரீக், கிதாபுல் ளுஅ;பா' பிரபல்யம் பெற்றவை. தனது வாழ்க்கையை நைஷாபு'ர், புஹாரா, நஸா, ஸீஸ்தான் ஆகிய இடங்களில் கழித்த இவர் ஹி 354இல் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு தத்கிரதுல் ஹவ்ஃப்;பாழ் பாக 3 பக் 920 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[38]சஹீஹ் இப்னு ஹிப்பான் பாக 15 பக் 435, அல் முஸ்தத்ரக் பாக 3 பக் 162, அல் கஸாயிசுல் குப்ரா பாக 2 பக் 266, அத்துர்ருல் மன்தூர் பாக 6 பக் 218, அஸ்ஸவாயிக் பக் 237

## பதினைந்தாம் ஹதீது

**اخرج الطبراني، عن الحسن بن علي رضي اللّه عنه انه قال لمعاوية بن خديج : يَا مُعَاوِيَةَ بْنِ خُدَيْج اِيَّاكَ وَ بُغْضَنَا، فَإِنَّ رَسُولَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عليه (وآله) وَ سَلَّمَ قَالَ: لاَ يَبْغُضُنَا اَحَدٌ، وَ لاَ يَحْسُدُنَا اَحَدٌ إِلاَّ ذِيْدَ يَوْمَ الْقِيَامَةِ عَنِ الْحَوْضِ بِسِيَاطٍ مِنْ نَارٍ.**

தபரானி இமாம் ஹஸன்[39] இப்னு அலீ (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, அவர் முஆவியா இப்னு ஹவூதைஜ்[40]என்பவரைப் பார்த்துக் கூறினார்: ‘‘முஆவியா இப்னு

---

[39]அபு‘ முஹம்மத் ஹஸன் இப்னு அலீ இப்னு அபீதாலிப் ஹி 2 ரமழான் மாதம் பிறை 15இல் பிறந்தார். நபி (ஸல்) அவர்கள் இவரதும் இவரின் சகோதரர் விடயத்தில் இருவரும் சுவர்க்கத்து வாலிபர்களின் தலைவர்கள் என கூறியுள்ளார்கள். இமாம் அலீ (அலை) அவர்களின் ஷஹாதத்திற்குப் பின் இராக் மக்கள் இவருக்கு பைஅத் செய்தனர். அதற்குப் பின் அமீர் முஆவியாவுடன் யுத்த செய்ய முனைந்த போது படைத் தளபதிகளில் சிலர் அமீர் முஆவியாவின் ஆசை வார்த்தைகளுக்கு சோரம் போய் இமாமுக்கு துரோகம் செய்தமையால் சமாதானம் செய்துவிட்டு மதீனாவுக்கு வந்தார்கள். அவர்கள் ஹி 50இல் அமீர் முஆவியின் தூண்டுதலில் தனது மனைவியான ஐ;தாவினால் நஞ்சூட்டப்பட்டு ஷஹீதாக்கப்பட்டார்கள். இவரின் வாழ்க்கை குறிப்பு நிறைய நூற்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றுல் சில: ;பீ ரிஹாபி அயிம்மதி அஹ்லில் பைத் பாக 2 பக் 2-42, ஹில்யதுல் அவ்லியா பாக 2 பக் 39-45, அல் இஸ்தீஆப் பாக 1 பக் 394 மற்றும் 383, அல் இஸாபா பாக 2 பக் 11-13

[40]முஆவியா இப்னு ஹவூதைஜ் இப்னு உக்பா சுகூனி கெந்தி, அமீர் முஆவியாவுக்கு மிகவும் நெருக்கமானவரும் அஹ்லுல் பைத்துக்களின் விரோதி என பிரபல்யம் பெற்றவருமாவார். மதாயினி, அபு‘துபைல் என்பவரிடமிருந்து அறிவித்துள்ளதாவது, இமாம் ஹஸன் தனது சீடர்களில் ஒருவரிடம் முஆவியா இப்னு ஹவூதைஜை நீர் அறிவீரா? என வினவி சீடரும் ஆம் என்றபோது, அவரைக் கண்டால் எனக்கு அறியத்தருமாறு இமாம்

ஹவூதைஜேயூ அஹ்லுல் பைத்துகளான எங்கள் மீது விரோதம் கொள்வதை அஞ்சிக் கொள். ஏனெனில், நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: எங்கள் மீது விரோதம் கொண்டவரையும், பொறாமை கொண்டவரையும் மறுமை நாளில் நெருப்புக் கசையால் அடித்து ஹவ்ழுல் கவ்தரை விட்டும் தூரமாக்கப்படும்''.[41]

## பதினாறாம் ஹதீது

**اخرج ابن عدي، و البيهقي في (شعبالايمان) ، عن علي قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: مَنْ لَمْ يَعْرِفْ حَقَّ عِتْرَتِي وَ الْاَنْصَارِ فَهُوَ لِاِحْدٰى ثَلَاثٍ، اِمَّا مُنَافِقٌ، وَ اِمَّا لِزِنْيَةٍ، وَ اِمَّا لِغَيْرِ طُهُوْرٍ–يَعْنِي حَمَلَتْهُ أُمُّهُ عَلَى غَيْرِ طُهْرٍ.**

இப்னு உதைய் மற்றும் 'ஷவூஅபுல் ஈமான்' என்ற நூலில் பைஹகி[42]யும் ஹஸரத் அலீ (ரழி) அவர்களிடமிருந்து

---

அச்சீடரிடம் வேண்டினார். ஒருநாள் முஆவியா இப்னு ஹவூதைஜ், அம்ர் இப்னு ஹரீத் என்பவரின் வீட்டிலிருந்து வெளியாவதைக் கண்ட அத்தோழர் விடயத்தை இமாமுக்கு அறிவித்தார். இமாம் ஹஸன் (அலை), இப்னு ஹவூதைஜை அழைத்து ஈரலை சப்பியவளின் மகனிடத்தில் இருந்து அலீக்கு ஏசுவது நீங்கள் தானா? எனக்கேட்டு விட்டு, அல்லாஹ் மீது ஆணையாக மறுமையில் கவ்ழுல் கவ்தரை நோக்கி வரும்போது உங்களால் ஒருபோதும் அதை நெருங்கவே முடியாது, ஏனெனில் முனாபிகுகள், நயவஞ்சகர்கள் அதை விட்டும் தூரமாக்கப்படுவார்கள் என்றார்கள்.

[41] அல் மு;ஜமுல் கபீர் பாக 3 பக் 81, அல் மு;ஜமுல் அவ்ஸத் பாக 3 பக் 203, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 172, கன்சுல் உம்மால் பாக 2 பக் 218, அத்துர்ருல் மன்தூர் பாக 6 பக் 7

[42]அபு'பக்ர் அஹ்மத் இப்னு ஹவூஸைன் இப்னு அலீ இப்னு மூஸா குஸ்ருஜொர்தி பைஹகி ஹி 384இல் பிறந்து ஹி 458இல் மரணித்தார். அஸ்சுனன், அல் ஆதார், ஷவூஅபுல் ஈமான், தலாயிலுந் நுபுவ்வத்

அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘எவர் எனது குடும்பத்தினரதும் அன்ஸாரிகளினதும் உரிமையை (حق) அறியவில்லையோ அவர் நயவஞ்சகனாக இருப்பார்.அல்லது தப்பாகப் பிறந்தவராக இருப்பார். அல்லது சுத்தமில்லாத நிலையில் உருப் பெற்றிருப்பார். அதாவது அவரது தாய், மாதாந்த போக்கின் போது அவரை கருக்கட்டியிருப்பாள்.[43]

## பதினேழாம் ஹதீது

اخرج الطبراني في الأوسط، عن ابن عمر قال: آخِرَ مَا تَكَلَّمَ بِهِ رَسُوْل اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ (وَآلِهِ) وَ سَلَّمَ: اُخْلُفُوْنِي فِي اَهْلِ بَيْتِي.

தபரானி அல் மு;ஜமுல் அவ்ஸத் என்ற நூலில் இப்னு உமர்[44] (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது ‘எனக்குப் பிறகுள்ள எனது பிரதிநிதி எனது அஹ்லுல் பைத்திலே

---

போன்றவற்றை இவரின் பிரபல்யமான நூற்களாக குறிப்பிடமுடியும். இவரைப் பற்றிய குறிப்பு தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 3 பக் 1132-1135, அல் அ;லாம் பாக 1 பக் 113 அல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[43]அல் காமில் இப்னு உதைய் பாக 3 பக் 1060, ஷவூஅபுல் ஈமான் பாக 2 பக் 232, அல் பிர்தௌஸ், தைலமி பாக 3 பக் 662, கன்சுல் உம்மால் பாக 6 பக் 218, அல் ;புஸவூலுல் முஹிம்மா பக் 27, அஸ்ஸவாயிக் பக் 231.

[44]அபு‘ அப்திர் ரஹ்மான் அப்துல்லாஹ் இப்னு உமர் இப்னு கத்தாப் (ரழி) ஹிஜ்ரத்திற்கு பத்து ஆண்டுகளுக்கு முன் மக்காவில் பிறந்து ஹி 73இல் மக்காவில் மரணித்தார். சிஹாஹவூஸ் ஸித்தாவின் ஆசிரியர்கள் இவரிடமிருந்து 2630 ஹதீதுகளை தமது ஹதீஸ் கிரந்தங்களில் அறிவித்துள்ளனர். இவரின் வாழ்க்கை குறிப்பு அல் இஸாபா பாக 4 பக் 107-109, தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 1 பக் 37-40 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இருக்கட்டும்’ என்பதே நாயகம் (ஸல்) அவர்கள் கடைசியாகப் பேசிய வார்த்தையாகும்.[45]

## பதினெட்டாம் ஹதீது

**اخرج الطبراني في الاوسط، عن الحسن بن علي رضي اللّه عنهما ان رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم قال: اِلْزَمُوا مَوَدَّتَنَا اَهْلَ الْبَيْتِ فَإِنَّهُ مَنْ لَقِيَ اللّٰهَ وَ هُوَ يَوَدُّنَا دَخَلَ الْجَنَّةَ بِشَفَاعَتِنَا، وَ الَّذِي نَفْسِي بِيَدِهِ لَا يَنْفَعُ عَبْدًا عَمَلٌ عَمِلَهُ إِلاَّ بِمَعْرِفَةِ حَقِّنَا.**

தபரானி ‘அல் மு;ஜமுல் அவ்ஸத்’ என்ற நூலில் இமாம் ஹஸன் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

‘‘அஹ்லுல் பைத்துக்களான எங்களை நேசம் வைப்பதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் எங்களை நேசம் வைத்த நிலையில் மரணித்தவர் எமது ஷபாஅத்தினால் சுவர்க்கம் நுழைவார். மேலும்,எவன் கைவசம் எனதுயிர் உள்ளதோ அவன் மீது சத்தியமாக, எமது தரத்தை, உரிமையை அறியாத ஒருவரின் வணக்கம் அவருக்கு பிரயோசனமளிக்க மாட்டாது’’.[46]

---

[45]மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 164, அஸ்ஸவாயிக் பக் 90, அஷ்ஷர;புல் முஅப்பித், நப்ஹானி பெய்ரூத்தி பக் 87

[46] அல் மு;ஜமுல் அவ்ஸத் பாக 3 பக் 122, அஸ்ஸவாயிக் பக் 230, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 172

## பத்தொன்பதாம் ஹதீது

**اخرج الطبراني في الأوسط، عن جابر بن عبد اللّه رضي اللّه عنه قال: خَطَبَنَا رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيهِ (وَآلِهِ) وَ سَلَّمَ وَ هُوَ يَقُوْلُ: اَيُّهَا النَّاسُ مَنْ اَبْغَضَنَا أَهْلَ الْبَيْتِ حَشَرَهُ اللّٰهُ تَعَالٰى يَوْمَ الْقِيَامَةِ يَهُوْدِيًا.**

தபரானி ‘அல் மு;ஜமுல் அவ்ஸத்’ என்ற நூலில் ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்[47] (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் குத்பா பிரசங்கத்தில் கூறக் கேட்டதாக அவர் சொல்கிறார்:

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘மனிதர்களேயூ எவர் ஒருவர் அஹ்லுல் பைத்தான எங்களுடன் விரோதம் கொண்டு மரணிக்கின்றாரோ அவரை நாளை மறுமையில் இறைவன் யஹூதியாக (யு‘தனாக) எழுப்புவான்’’.[48]

---

[47]அபு‘ அப்தில்லாஹ் ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் இப்னு அம்ர் அன்ஸாரி சில்மி சஹாபியும் நம்பகமான ஹதீஸ் அறிவிப்பாளருமான இவர் ஹிஜ்ரத்திற்கு 20 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார். ‘இரண்டாம் அகபா’ ( العقبة الثانية) வில் சிறுவராக இருந்த இவர் தன் தந்தையுடன் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார். இமாம் புஹாரியுடைய அறிவிப்பின் படி பத்ர் போரின் போது நீர் சுமக்கும் பொறுப்பை கொண்டிருந்தார். பின்பு 18 யுத்தங்களில் கலந்து கொண்டார். வரலாற்று ஆசிரியர் கலபியுடைய கூற்றின் பிரகாரம் சிப்பீன் யுத்தத்தின் போது இமாம் அலீ (அலை) அவர்களது படைத்தரப்பில் பங்கேற்றார். ஹதீது அறிவிப்பாளரான இவர் ஏராளமான நபி மொழிகளை மனனம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. வாழ்நாளின் கடைசி பகுதியில் கண்பார்வையை இழந்த இவர் ஹி 74ம் வருடம் தனது 94வது வயதில் மரணித்தார். இவரது வாழ்க்கை குறிப்பு அல் இஸ்தீஆப் பாக 1 பக் 219-220, தபகாது இப்னு ஸ;த் பாக 5 பக் 467, அத்தஹ்தீப் பாக 4 பக் 214, உஸ்துல் காபா பாக 1 பக் 356-358 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[48]அல் மு;ஜமுல் அவ்ஸத் பாக 5 பக் 14, மஸ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 172, லிஸானுல் மீஸான் பாக 3 பக் 10

## இருபதாம் ஹதீது

**اخرج الطبراني في الأوسط عن عبد اللّه بن جعفر ، قال: سمعت رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: يَا بَنِي هَاشِمٍ، اِنِّي قَدْ سَأَلْتُ اللّٰهَ لَكُمْ اَنْ يَجْعَلَكُمْ نُجَدَاءَ رُحَمَاءَ، وَ سَأَلْتُهُ اَنْ يَهْدِيَ ضَالَّكُمْ، وَ يُؤْمِنَ خَائِفَكُمْ، وَ يُشْبِعَ جَائِعَكُمْ، وَ الَّذِي نَفْسِي بِيَدِهِ لَا يُؤْمِنُ اَحَدٌ حَتّٰى يُحِبَّكُمْ بِحُبِّي، أَ تَرْجُوْنَ اَنْ تَدْخُلُوا الْجَنَّةَ بِشَفَاعَتِي وَ لَا يَرْجُوْهَا بَنُوْ عَبْدِ الْمُطَّلِبِ؟.**

தபரானி ‘அல் மு;ஜமுல் அவ்ஸத்’ என்ற நூலில் அப்தில்லாஹ் இப்னு ஜ;பர்[49] (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் கூற கேட்டதாக அவர் சொல்கிறார்:

நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘ஹாஷிமுடைய சந்ததியினரேயூ உங்களை கண்ணியமானவர்களாக ஆக்குமாறு

---

[49]அப்துல்லாஹ் இப்னு ஜ;பர் இப்னு அபீதாலிப் ஹாஷிமி குறைஷி. நாயகத்தின் சஹாபாக்களில் ஒருவர். இவரின் தாய் அஸ்மா பின்த் உமைஸ் ஆகும். அவரை ஹிஜ்ரி முதலாம் ஆண்டு ஹபஷாவில் பெற்றெடுத்தாள். இவரே ஹபஷாவில் பிறந்த முதலாவது முஸ்லிம் குழந்தையாகும். பின்பு தன் தந்தையுடன் மதினாவுக்கு வந்து நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழிகளை மனனம் செய்து அவற்றை அறிவிப்புச் செய்தார். அதன் பிறகு அப்தில்லாஹ் இப்னு ஜ;பர், பஸரா, கூபா மற்றும் ஷாம் பிரதேசங்களில் குடியமர்ந்தார். ‘கொடை வள்ளல்’ என பிரபல்யம் பெற்ற இவர் சிப்பீன் யுத்தத்தில் இமாம் அலீயுடைய படைத்தளபதிகளில் ஒருவராகும். இவர் ஹி 90இல் தனது 90வது வயதில் மதினாவில் மரணித்தார். இவரைப் பற்றிய குறிப்பு: அல் இஸ்திஆப் பாக 3 பக் 880-882, அல் இஸாபா பாக 4 பக் 48-49, உஸ்துல் காபா பாக 3 பக் 133-135 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறைவனிடம் இரைஞ்சியுள்ளேன். மேலும், உங்களில் வழி தவறியவருக்கு நேர்வழி காட்டுமாறும், அச்சமுடையவர்களுக்கு அபயமளிக்குமாறும், பசித்தவர்களுக்கு வயிறு நிறையச் செய்யுமாறும் அவனை வேண்டியுள்ளேன். எனதுயிர் எவன் கைவசமுள்ளதோ அவன் மீது சத்தியமாக, எனக்காக உங்களை நேசிக்கின்ற வரைக்கும் அவர்களில் (முஸ்லிம்களில்) எவரும் (உண்மையாக) ஈமான் கொள்ள மாட்டார்கள். (மக்களேயூ) அப்துல் முத்தலிபுடைய மக்கள் இந்த எதிர்பார்ப்பை வைக்காது நீங்கள் எனது ஷபாஅத்தைக் கொண்டு சுவனம் செல்ல ஆசைப்படுகின்றீர்களா?”.[50]

## இருபத்தோராம் ஹதீது

اخرج ابن ابي شيبة ، و مسدد ، في مسنديهما، و الحكيم الترمذيفي نوادر الاصول، و ابو يعلى، و الطبراني، عن سلمة بنالاكوعقال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اَلنُّجُوْمُ اَمَانٌ لِأَهْلِ السَّمَاءِ وَ اَهْلُ بَيْتِي اَمَانٌ لِأُمَّتِي.

இப்னு அபீஷைபா[51] இன்னும் முஸத்தத்[52] ஆகியோர் தமது முஸ்னத் கிரந்தங்களிலும் மற்றும் ஹாகிம் திர்மிதி[53]‘நவாதிருல்

[50]அல் மு;ஜமுல் அவ்ஸத் பாக 8 பக் 373, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 170, கன்சுல் உம்மால் பாக 6 பக் 203, ஹாகிம் (சிறு வித்தியாசத்துடன்) பாக 3 பக் 148, அஸ்ஸவாயிக் பக் 140

[51]அபு‘பக்ர் அப்தில்லாஹ் இப்னு முஹம்மத் இப்னு அபீஷைபா இப்ராஹீம் இப்னு உதுமான் அல்கூ;பி, ஹி 159இல் பிறந்தார். பக்தாத் நகரின் ரஸா;பா எனுமிடத்தில் ஆசிரியராக பணிபுரிந்த இவர் அக்காலத்தில் பிரபல்யமான ஹதீஸ் அறிவிப்பாளராக திகழ்ந்தார். ஹி 235இல் மரணித்த இவரின் வாழ்க்கை குறிப்பு தபகாத்து இப்னு ஸ;த் பாக 6 பக் 277, ;பெஹ்ரிஸ்த் இப்னு நதீம் பக் 229, தாரீகு பக்தாத் பாக 10 பக் 66-71, தத்கிரதுல்

உஸவூல்' என்ற நூலிலும் மேலும் அபு'ய;லா, தபரானி ஆகியோர் ஸலமா இப்னு அக்வ;[54] என்பவரிடமிருந்து அறிவித்துள்ளதாவது: நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

“நட்சத்திரங்கள் விண்ணுலகத்தாரை பாதுகாக்கின்றன. எனது அஹ்லுல் பைத்துக்கள் என் சமூகத்தின் பாதுகாவலர்களாவர்”.[55]

---

ஹவூ;ப்;பாழ் பாக 2 பக் 432-433, ஷதராத்துத் தஹப் பாக 2 பக் 85 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[52]அபுல் ஹஸன் முஸத்தத் இப்னு முஸர்ஹத் அல் பஸரி எனப்படும் இவரிடமிருந்து அபு'ஸர்அ, புஹாரி, காழி இஸ்மாயீல், அபு'ஹனீபா போன்றோர் ஹதீஸ் அறிவிப்புச் செய்துள்ளனர். பக்தாத் நகரில் முதன்முதலாக் 'முஸ்னத்' எழுதியவரும் இவராகும். இவர் தனது காலத்தின் ஹாபிழ், ஹவுஜ்ஜத், இமாம் மற்றும் எழுத்தாளர்களின் பட்டியளில் இடம் பெறுகிறார். இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலுடன் கடிதத் தொடர்பு வைத்திருந்த முஸத்தத் ஹி 228இல் மரணித்தார். அவரைப் பற்றிய குறிப்பு: தபகாதுல் ஹனாபிலா பாக 1 பக் 341-345, அல் அ;லாம் பாக 8 பக் 108 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

[53]அபு' அப்தில்லாஹ் முஹம்மத் இப்னு அலீ இப்னு ஹஸன் இப்னு ஷீர் எனப்படும் இவர் ஹகீம் திர்மிதி என்ற புனைப்பெயர் பெற்ற குராஸானின் அறிஞர்களில் ஒருவராகும். இவர் தன் தந்தை மற்றும் குதைபா இப்னு ஸயீத் போன்ற மேதைகளிடமிருந்து ஹதீஸ் அறிவிப்புச் செய்துள்ளார். அவரின் நூற்களில் 'நவாதீருல் உஸவூல் ;பீ ம;ரி;பதி அஹ்பாரிர் ரஸவூல் (ஸல்), கத்முல் விலாயத், இலலுஷ் ஷரீஅத் வல் ;புரூக்' போன்றவற்றை முக்கியமானவையாக குறிப்பிடலாம். ஹாகிம் திர்மிதி ஹி 285இல் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு தபகாதுஷ் ஷா;பிஈ பாக 2 பக் 20, அல் அ;லாம் பாக 7 பக் 156, மு;ஜமுல் முஅல்லி;பீன் பாக 10 பக் 315 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[54]ஸலமா இப்னு அம்ர் இப்னு அக்வ; பிரபலமான அறபு வீரனும் குதிரையோட்ட வீரருமாவார். இவர் ஹிஜ்ரத்திற்கு ஆறு வருடங்களுக்கு முன் பிறந்து 'பைஅதுஷ் ஷஜரா' நிகழ்வின் போது உயிருள்ள வரை நபி (ஸல்) அவர்களுக்காக எதையும் தியாகம் செய்வதென பைஅத் செய்தார். ஏழு யுத்தங்களில் கலந்து கொண்ட அவர் ஹி 74 இல் மரணித்தார். இவரது வாழ்க்கை குறிப்பு அல் இஸாபா பாக 3 பக் 118, தபகாது இப்னு ஸ;த் பாக 4 பக் 38 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## இருபத்திரண்டாம் ஹதீது

اخرج البزار ، عن ابي هريرة، قال: قال رسول اللّٰه صلى اللّٰه عليه (وآله) و سلم: اِنِّي خَلَّفْتُ فِيْكُمُ اثْنَيْنِ لَنْ تَضِلُّوا بَعْدَهُمَا كِتَابَ اللّٰهِ وَعِتْرَتِى وَ لَنْ يَتَفَرَّقَا حَتّٰى يَرِدَا عَلَيَّ الْحَوْضَ.

பஸ்ஸார்[56]என்பவர் அபு'ஹவூரைரா[57](ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

---

[55]அல் மதாலிபுல் ஆலிய்யா - இப்னு ஹஜர் பாக 4 பக் 262, முக்தஸரு இத்திஹா;பிஸ் ஸாததில் முஹிர்ரா – பு'ஸரி பாக 5 பக் 210, நவாதிருல் உஸவூல் பாக 2 பக் 199, அல் மு;ஜமுல் கபீர் பாக 7 பக் 22, ஹாகிம் (சிறுவித்தியாசத்துடன்) பாக 3 பக் 457, கன்சுல் உம்மால் பாக 6 பக் 216, பாக 7 பக் 217, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 174, தகாயிருல் உக்பா பக் 17

[56]அபு'பக்ர் அஹ்மத் இப்னு அம்ர் இப்னு அப்துல் ஹாலிக் பஸ்ஸார் பஸரி 'அல்முஸ்னத்' என்ற நூலின் ஆசிரியரான இவர் பஸராவில் பிறந்தாலும் பின் அங்கிருந்து பக்தாதுக்கு இடம் பெயர்ந்தார். அங்கிருந்த போதே 'முஹத்தித்' (ஹதீஸ் அறிவிப்பாளர்) தரத்தை அடைந்தார். இரண்டு தடவைகள் கல்வி நடவடிக்கைக்காக இஸ்பஹானுக்கும் சென்றுள்ள இவர் ஹி 291இல் ஸஹ்லா என்ற இடத்தில் மரணித்தார். இவரது வாழ்க்கை குறிப்பு தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 2 பக் 653-654, திக்ரு அஹ்பாரி இஸ்பஹான் பாக 1 பக் 104, லிஸானுல் மீஸான் பாக 1 பக் 337, தாரீகு பக்தாத் பாக 4 334 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[57] அபு'ஹவூரைரா அப்துர் ரஹ்மான் இப்னு ழஹ்ர் (அல்லது உமைர் இப்னு ஆமிர்) தவ்ஸி. ஜாஹிலிய்யா காலத்தில் அப்துஸ் ஸம்ஸ் என்ற பெயரைக் கொண்டிருந்தார். அவர் கைபர் வெற்றி கொள்ளப்பட்டபோது மதினாவுக்கு வந்து ஹி 7இல் இஸ்லாத்தை ஏற்றார். இவர் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வின் கடைசிப் பகுதியில் இணைந்து கொண்டாலும் அனைத்து சஹாபாக்களையும் விட அதிகமான ஹதீதுகளை அறிவிப்புச் செய்துள்ளார். அஹ்லுல் ஹதீதுகளின் கோட்பாட்டின்படி இவர் ஏராளமான ஹதீதுகளை சொல்லியுள்ள சஹாபியாகும் என இப்னு ஹஜர் குறிப்பிடுகிறார். அபு'ஹவூரைரா ஹி 58இல் மரணித்தார். அவரின் வழக்கை குறிப்பு அல் இஸாபா பாக 2 பக் 199-207, தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 1 பக் 32-37 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது (மேலதிக விபரங்களுக்கு இம்மகான் பற்றி

‘‘உங்கள் மத்தியில் இரண்டு விடங்களை விட்டுச் செல்கிறேன். அவை இருக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவறவே மாட்டீர்கள். (அவை) இறைவேதமும் எனது குடும்பமுமாகும். ஹவ்ழுல் கவ்ஸரில் என்னிடம் வரும்வரை அவை இரண்டும் ஒன்றை விட்டு ஒன்று பிரியவே மாட்டா’’.[58]

## இருபத்து மூன்றாம் ஹதீது

اخرج البزار، عن علي رضي اللّه عنه قال:قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم:

اِنِّي مَقْبُوْضٌ، وَ اِنِّي قَدْ تَرَكْتُ فِيْكُمُ الثَّقَلَيْنِ، كِتَابَ اللّٰهِ، وَ اَهْلَ بَيْتِي، وَ اِنَّكُمْ لَنْ تَضِلُّوا بَعْدَهُمَا .

பஸ்ஸார் என்பவர்ஹஸரத் அலீ (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘நான் உயிர் வாங்கப்படும் தறுவாயில் உள்ளேன். எனவே, உங்கள் மத்தியில் இரண்டு பெறுமதிமிக்க விடயங்களான இறைவேதத்தையும் எனது அஹ்லுல் பைத்துக்களையும் விட்டுச் செல்கின்றேன். அவ்விரண்டும் இருக்கும் போது நீங்கள் ஒருபோதும் வழிதவறவே மாட்டீர்கள்’’.[59]

---

எழுதப்பட்டுள்ள செய்க் மஹ்மூத் அபு‘ ரய்யா மற்றும் செய்யித் ஷர;புத்தீன் ஆகியோரின் நூற்களைப் பார்க்கவும்)

[58]கஷ்;புல் அஸ்தார்- ஹைதமி பாக 3 பக் 223, ஸவாயிது முஸ்னத் பஸ்ஸார் பக் 277, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 163.

[59]கஷ்புல் அஸ்தார் - ஹைதமி பாக 3 பக் 221, ஸவாயிது முஸ்னது பஸ்ஸார் பக் 277, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 163.

## இருபத்து நான்காம் ஹதீது

اخرج البزار، عن عبد اللّٰه بن الزبير، ان النبي صلى اللّٰه عليه (وآله) و سلم، قال: مَثَلُ اَهْلِ بَيْتِي مَثَلُ سَفِيْنَةِ نُوْحٍ مَنْ رَكِبَ فِيْهَا نَجا، وَ مَنْ تَخَلَّفَ عَنْهَا غَرَقَ.

பஸ்ஸரார் என்பவர் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘எனது அஹ்லுல் பைத்துக்களுக்கு உதாரணம், நபி நூஹ் (அலை) அவர்களின் கப்பலைப் போன்றாகும். அதில் ஏறியவர் வெற்றி பெறுவார், ஏறாதவர் (வழிகேட்டில்) மூழ்கி விடுவார்’’.[60]

## இருபத்தைந்தாம் ஹதீது

اخرج البزار، عن ابن عباس رضي اللّٰه عنهقال: قال رسول اللّٰه صلى اللّٰه عليه (وآله) و سلم: مَثَلُ اَهْلِ بَيْتِي مَثَلُ سَفِيْنَةِ نُوْحٍ مَنْ رَكِبِهَا نَجا، وَ مَنْ تَخَلَّفَ عَنْهَا غَرَقَ.

பஸ்ஸார் என்பவர் அப்துல்லாஹ் இப்னு சுபைர்[61] (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்)

---

[60]கஷ்புல் அஸ்தார் பாக 3 பக் 222, ஸவாயிது முஸ்னத் பஸ்ஸார் பக் 277, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 168, அல் மு;ஜமுல் கபீர் பாக 1 பக் 125, தகாயிருல் உக்பா பக் 20, முன்தகபு கன்சில் உம்மால் பாக 5 பக் 92.

[61]அபு‘பக்ர் அப்துல்லாஹ் இப்னு சுபைர் இப்னு அவாம் இப்னு குவைலித் குறைஷி அஸதி. வரலாற்று ஆசிரியர் வாஹிதியுடைய கூற்றின் படி இவர் ஹி 2இல் பிறந்தார். உஸ்மான் (ரழி) யின் ஆட்சியின்போது ஆபிரிக்காவில் கிடைத்த வெற்றியில் இவருக்கும் பங்குண்டு. இமாம் அலீ (அலை) அவர்களின் ஆட்சியின் ஆரம்பத்தில் ‘ஜமல் யுத்தம்’ நடைபெறுவதற்கு அடிப்படை காரண கர்தாக்களாக இருந்தவர்களுல் இவரும் ஒருவர். இமாம்

அவர்கள் சொன்னார்கள்: ''எனது அஹ்லுல் பைத்துக்களுக்கு உதாரணம், நபி நூஹ் (அலை) அவர்களின் கப்பலைப் போன்றாகும். அதில் ஏறியவர் வெற்றி பெறுவார். ஏறாதவர் (வழிகேட்டில்) மூழ்கி விடுவார்''.[62]

## இருபத்தாறாம் ஹதீது

اخرج الطبراني، عن ابي ذر رضي اللّه عنه سمعت رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: مَثَلُ اَهْلِ بَيْتِي فِيْكُمْ مَثَلُ سَفَيْنَةِ نُوْحٍ فَي قَوْمِ نُوْحٍ، مَنْ رَكِبَهَا نَجَا وَ مَنْ تَخَلَّفَ عَنْهَا هَلَكَ، وَ مَثَلُ بَابِ حِطَّةٍ فِي بَنِي اِسْرَائِيْل .

தபரானி, அபு'தர்[63] (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, அவர் சொன்னார். நாயகம் (ஸல்)

---

அலீயின் ஷஹாதத்தை தொடர்ந்து அமீர் முஆவியாவுக்கு பைஅத் செய்தார். யஸீத் இறந்த பின்பு மக்களிடமிருந்து தனக்கு பைஅத் பெற முனைந்தபோது அப்துல் மலிக் இப்னு மர்வான், ஹஜ்ஜாஜ் இப்னு யு'சுப் தகபியுடைய தலைமையில் அவரை அடக்குவதற்கு படையொன்றை அனுப்பினான். அப்துல்லாஹ் இப்னு சுபைர் ஹி 73இல் கொலை செய்யப்பட்டார். இவரது வாழ்க்கை குறிப்பு அல் இஸாபா பாக 4 பக் 67-71, அல் அ;லாம் பாக 4 பக் 218 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[62]கஷ்புல் அஸ்தார் பாக 2 பக் 222, ஸவாயிது முஸ்னத் பஸ்ஸார் பக் 277, மஜ்மஉஸ் ஜவாயித் பாக 9 பக் 868, ஹில்யதுல் அவ்லியா பாக 4 பக் 306, கன்சுல் உம்மால் பாக 6 பக் 216.

[63]அபு'தர் ஜவூன்துப் இப்னு ஜவூனாதா கி;ப்;பாரி, நாயகம் (ஸல்) அவர்களை முதன் முதலாக ஈமான் கொண்டவர்களுல் ஒருவர். அவர் முதலாவது பைஅத்தின் போதே இஸ்லாத்தை ஏற்றார். இஸ்லாமிய த;வாவின் ஆரம்பத்தில் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து கொண்ட ஐவருல் இவரும் ஒருவர். பின் அவரின் பிரதேசம், கோத்திரத்தை நோக்கிச் சென்று அதன் பின் மதினாவுக்கு இடம் பெயர்ந்தார். அறிவு, துறவரம், ஜிஹாத், உண்மைபேசுதல், இஹ்லாஸ் போன்ற விடயத்தில் தனிச் சிறப்பு பெற்றவர்.

அவர்கள் கூற கேட்டேன்: ‘‘உங்களுக்கு மத்தியில் எனது அஹ்லுல் பைத்துக்களுக்கு உதாரணம், நூஹ் (அலை) அவர்களின் சமூகத்திற்கு மத்தியில் இருந்த கப்பலைப் போன்றாகும். அதில் ஏறியவர் வெற்றியடைவார். (மேலும் அவர்களுக்கு உதாரணம்) பனூஇஸ்ராயீல்களுக்கு மத்தியிலிருந்த ‘பாபு ஹித்தா’[64]வைப் போன்றதாகும்.[65]

---

வரலாற்று ஆசிரியர் தஹபியுடைய கூற்றின் படி இவருடைய சிறப்பை அறியாதவர்கள் கிடையாது. இதற்கு சான்றாக இவர் விடயத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீதை எடுக்க முடியும். ‘அபு‘தரை விட உண்மை பேசியவரை இப்பு‘மி சுமக்கவுமில்லை, வானம் நிழல் கொடுக்கவுமில்லை.’ நபியவர்களின் மரணத்திற்குப் பின் ஷாம் தேசத்திற்கு ஹிஜ்ரத் செய்து இரண்டாம் கலீபா மரணிக்கின்ற வரை அங்கேயே காலத்தை கழித்தார். உஸ்மான் (ரழி)யின் ஆட்சிக் காலத்தில் டமஸ்கஸில் குடியமர்ந்த இவர், ஏழைகளின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க குரல் கொடுத்தார். அதை சகித்துக் கொள்ள முடியாத அமீர் முஆவியா கலீபாவிடத்தில் இவரைப் பற்றி முறைப்பாடு செய்த காரணத்தால் தனது வாழ்வின் கடைசிப்பகுதியில் மூன்றாம் கலீபாவினால் ‘ரபதா’ என்ற இடத்திற்கு நாடு கடத்தப்பட்டு ஹி 31இல் அங்கேயே மரணித்தார். மதாயினி என்பவரின் அறிவிப்பின்படி இப்னு மஸ்ஊத் (ரழி) இவரின் ஜனாஸாவைத் தொழுவித்தார். இவரது வாழ்க்கைக் குறிப்பு அல் அ;லாம் பாக 2 பக் 136 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[64] ‘ஹித்தா’ என்பதற்கு அகராதியில் கொட்டுதல், கீழே கொட்டுதல் எனப்பொருள். ‘பாபுல் ஹித்தா’ என்பது ஒரு வாசலாகும். இறைவன் பனூ இஸ்ராயீல்களைப் பார்த்து தங்களது பாவங்கள் கொட்டிப்படுவதற்காக வேண்டி ஸஜதா செய்பவர்கள் அவ்வாசலினூடாக நுழையும் படி கட்டளையிட்டான். இது சம்பந்தமாக சூரா பகரா வசனம் 58, சூரா அ;ரா;ப் வசனம் 161 ஐப் பார்க்கவும்.
அல்லாமா ஷர;புத்தீன் அவர்களின் கருத்துப்படி, அஹ்லுல் பைத்துக்களை பாபுல் ஹித்தாவுக்கு ஒப்புவமையாக்கப் பட்டதன் காரணம் அவ்வாசலை, இறை சன்னீதானத்திற்கு முன் பணிவுத்தன்மையும் அவனது கட்டளைக்கு சிரம் சாய்க்கும் இடமாகவும் ஆக்கியுள்ளான். இவ்விடயம் பனூ இஸ்ராயீல்களின் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது. அதேபோல், இஸ்லாமிய சமூகத்திற்கு மத்தியில் அஹ்லுல் பைத்துக்களுக்கு கட்டுப்படுதல் மேலும் அவ்வழியில் தோன்றிய இமாம்களைப் பின்பற்றுதலை, இறை கட்டளைகளுக்கு முன் சிரம் சாய்ப்பதாகவும், பணிவுத்தன்மை வெளிப்படும் இடமாகவும் ஆக்கி, அதை முஸ்லிம்களின் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு காரணமாகவும் கருதியுள்ளான். (மேலதிக விபரங்களுக்கு அல் முராஜஆத் கடித இல 8ஐப் பார்க்கவும்)

## இருபத்தேழாம் ஹதீது

اخرج الطبراني في الأوسط، عن ابي سعيد الخدري رضي اللّه عنه، قال: سمعت رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم يقول: اِنَّمَا مَثَلُ اَهْلِ بَيْتِي كَمَثَلِ سَفِيْنَةِ نُوْحٍ مَنْرَكِبَهَا نَجَا وَ مَنْ تَخَلَّفَ عَنْهَا غَرَقَ، وَ اِنَّمَا مَثَلُ اَهْلِ بَيْتِي فِيْكُمْ مَثَلُ بَابِ حِطَّةٍ فِي بَنِي اِسْرَائِيْل مَنْ دَخَلَهُ غُفِرَ لَهُ.

தபரானி ‘மு;ஜமுல் அவ்ஸத்’ என்ற நூலில் அபு‘ஸயீத் அல் குத்ரி (ரழி) அவர்கள் மூலம் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டதாக அறிவிப்பதாவது:‘‘நிச்சயமாக எனது அஹ்லுல் பைத்துக்களுக்கு உதாரணம், நபி நூஹ் (அலை) அவர்களின் கப்பலைப் போன்றாகும். அதில் ஏறியவர் வெற்றி பெறுவார். ஏறாது பின்வாங்கியர் (வழிகேட்டில்) மூழ்குவார்.மேலும், நிச்சயமாக உங்களுக்கு மத்தியில் எனது அஹ்லுல் பைத்துக்களுக்கு உதாரணம் பனூ இஸ்ராயீல்களின் ‘ஹித்ததுன்’என்பதன் உதாரணத்தைப் போலாகும். அதில் நுழைந்தவரின் பாவங்கள் மன்னிக்கப்படும்.[66]

---

[65]அல் மு;ஜமுல் அவ்ஸத் பாக 4 பக் 283, மற்றும் பாக 6 பக் 251, அல் மு;ஜமுஸ் ஸகீர் பாக 1 பக் 139, முஸ்தத்ரகுல் ஹாகிம் பாக 2 பக் 373, முஹ்தஸரு இத்திஹா;பில் ஹியரா – பு‘ஸரி பாக 5 பக் 211, குனூஸவுல் ஹகாயிக் பக் 132, தகாயிருல் உக்பா பக் 20, மீஸானுல் இ;திதால் பாக 1 பக் 224.

[66]அல் மு;ஜமுல் அவ்ஸத் பாக 6 பக் 406, அல் மு;ஜமுஸ் ஸகீர் பாக 2 பக் 22, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 168, பைழுல் கதீர் பாக 4 பக் 356.

## இருபத்தெட்டாம் ஹதீது

اخرج ابن النجار في تاريخه، عن الحسن بن علي رضي اللّه عنهما قال: قال رسول اللّه صلىاللّه عليه و سلم: لِكُلِّ شَيْءٍ اَسَاسٌ وَ اَسَاسُ الْإِسْلَامِ حُبُّ اَصْحَابِ رَسُوْلِ اللّٰهِ وَ حُبُّ اَهْلِ بَيْتِهِ.

இப்னு நஜ்ஜார்[67] தனது வரலாற்று நூலில் இமாம் ஹஸன் இப்னு அலீ (அலை) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

''ஒவ்வொன்றுக்கும் ஓர் அடிப்படையுண்டு. இஸ்லாத்தின் அடிப்படை நாயகத்தின் சஹாபாக்களை நேசிப்பதும் அன்னாரின் அஹ்லுல் பைத்துக்களை நேசிப்பதுமாகும்''.[68]

## இருபத்தொன்பதாம் ஹதீது

اخرج الطبراني، عن عمر (رض) قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم:

كُلُّ بَنِي اُنْثٰى فَإِنَّ عَصَبَتَهُمْ لِاَبِيْهِمْ مَا خَلَا وُلْدِفَاطِمَةَ فَإِنِّي اَنَا عَصَبْتُهُمْ وَ اَنَا اَبُوْهُمْ.

தபரானி உமர் இப்னு கத்தாப்[69] (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

---

[67] அபு' அப்தில்லாஹ் முஹம்மத் இப்னு மஹ்முத் இப்னு ஹஸன் இப்னு ஹிபதுல்லாஹ் இப்னு மஹாஸின் பக்தாதி எனப்படும் இவர் ஹி 578இல் பிறந்து ஹி 643இல் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு தத்கிரதுல் ஹவ்பு;ப்;பாழ் பாக 4 பக் 1428 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[68] அத்துர்ருல் மன்தூர் பாக 6 பக் 7, கன்சுல் உம்மால் பாக 6 பக் 218.

‘‘ஒவ்வொரு பெண் பிள்ளையின் சந்ததியும் அவர்களது தந்தையருடன் இணைக்கப்படும். பாத்திமா (ரழி) அவர்களது பிள்ளைகளைத்தவிர. அவர்கள் என்னுடன் தொடர்பு பட்டுள்ளனர். நான் அவர்களின் தகப்பனாவேன்’’.[70]

## முப்பதாம் ஹதீது

اخرج الطبرانی عن فاطمة الزهراء رضی الله عنها، قالت: قال رسول اللّه صلی اللّه علیه (وآله) و سلم: كُلُّبَنِي أُمٍّ يَنْتَمُوْنَ اِلىٰ عَصَبَةٍ إِلاَّ وُلْدِ فَاطِمَةَ فَاَنَا وَلِيُّهُمْ وَاَنَا عَصَبَتُهُمْ.

தபரானி அன்னை பாத்திமா ஸஹ்ரா (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘அனைத்து பெண்பிள்ளைகளின் சந்ததிகளையும் அவர்களின் தந்தையின் குடும்பத்தினருடன் தொடர்புபடுத்தப்படும். பாத்திமா

[69]அபு‘ ஹப்ஸ் உமர் இப்னுல் கத்தாப் இப்னு நுபைல் அதவி எனப்படும் இவர் ஹிஜ்ரத்திற்கு 40 வருடங்களுக்கு முன்பு மக்காவில் பிறந்து ஹிஜ்ரத்திற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் இஸ்லாத்தை ஏற்றார். இவர் ஹி 11இல் இரண்டாம் கலீபாவாக நியமிக்கப்பட்டார். இவரின் 13 வருட ஆட்சிக் காலத்தில் அதிகமான பிரதேசங்கள் முஸ்லிம்களினால் வெற்றி கொள்ளப்பட்டன. ஹி 23இல் அபு‘ லு;லு; ;பீரூஸ் (பைரூஸ்) என்பவனினால் தாக்கப்பட்டு மூன்று தினங்களுக்குப் பின் உயிர் நீத்தார்கள். இவரின் வாழ்க்கை குறிப்பு சி;பதுஸ் ச;ப்வா பாக 1 பக் 101, தாரீகு தபரி பாக 2 பக் 187 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[70]அல் மு;ஜமுல் கபீர் பாக 1 பக் 124, கன்சுல் உம்மால் பாக 6 பக் 220, அஸ்ஸவாயிகுல் முஹ்ரிகா பக் 185, தகாயிருல் உக்பா பக் 121, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 4 பக் 224

(ரழி) அவர்களின் பிள்ளைகளைத் தவிர. நான் அவர்களுக்கு பொறுப்பானவரும் தகப்பனுமாவேன்''.[71]

## முப்பத்தோராம் ஹதீது

**اخرج الحاكم عن جابر، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: لِكُلِّ بَنِي أُمٍّ عَصَبَةٌيَنْتَمُوْنَ إِلَيْهِمْاِلَّا اِبْنَيْفَاطِمَةَ فَأَنَا وَلِيُّهُمَا وَ عَصَبَتُهُمَا .**

ஹாகிம், ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் அன்ஸாரி (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ''பெண் பிள்ளைகளின் சந்ததியினர் அவர்களின் தந்தையின் வம்சத்துடனே தொடர்புபடுத்தப்படுவர். ஆனால், பாத்திமாவின் இரண்டு பிள்ளைகளையும் தவிர. அவர்களுக்கு பொறுப்பாகவும் தந்தையாகவும் நானிருக்கின்றேன்''.[72]

## முப்பத்திரண்டாம் ஹதீது

---

[71]அல் மு;ஜமுல் கபீர் பாக 1 பக் 124, கன்சுல் உம்மால் பாக 6 பக் 220, தாரீகு பக்தாத் பாக 11 பக் 285, மக்தல் - குவாரஸ்மி பாக 2 பக் 88, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 172.

[72]முஸ்தத்ரகுஸ் சஹீஹைன் பாக 3 பக் 164, கன்சுல் உம்மால் பாக 6 பக் 216, முன்தஹபு கன்சில் உம்மால் பாக 5 பக் 216.

اخرج الطبراني في الاوسط، عن جابر، اَنَّهُ سَمِعَ عُمَرَ بْنِ الْخَطَّاب رضي اللّه عنه يَقُوْلُ لِلنَّاسِ حِيْنَ تَزَوَّجَ بِنْتَ عَلِيٍّ رضي اللّه عنه: أَلَا تُهَنِّئُوْنِي، سَمِعْتُ رَسُوْلَ اللّٰهِ صلى اللّه عليه (وآله) و سلم يَقُوْلُ: يَنْقَطِعُ يَوْمَ الْقِيَامَةِ كُلُّ سَبَبٍ وَ نَسَبٍ إِلاَّسَبَبِي وَ نَسَبِي .

தபரானி, ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, உமர் இப்னு கத்தாப் (ரழி) அவர்கள் ஹஸரத் அலீ (ரழி) அவர்களின் மகளை திருமணம் செய்து கொண்டபோது மக்களைப் பார்த்துக் கூறினார்கள்: "எனக்கு வாழ்த்துத் தெரிவிக்க மாட்டீர்களா? ஏனெனில், நாயகம் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டேன்,"மறுமைநாளில் எனது அடிப்படையும், வம்சத்தையும் தவிர மற்ற எல்லா அடிப்படையும் வம்சமும் துண்டித்துப்போய் விடும்".[73]

## முப்பத்து மூன்றாம் ஹதீது

اخرج الطبراني عن ابن عباس رضي اللّه عنه قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: كُلُّ سَبَبٍ وَ نَسَبٍ مُنْقَطِعٌ يَوْمَ الْقِيَامَةِ إِلاَّ سَبَبِي وَ نَسَبِي .

தபரானி, இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

---

[73] அல் மு;ஜமுல் கபீர் பாக 1 பக் 124, ஹில்யதுல் அவ்லியா பாக 7 பக் 314, அல் மு;ஜமுல் அவ்ஸத் பாக 1 பக் 282, அஸ் சுனனுல் குப்ரா பாக 7 பக் 101, மற்றும் பாக 7 பக் 185, அத்துர்ரிய்யதுத் தாஹிரா பக் 115.

''மறுமையில் எனது அடிப்படை மற்றும் வம்சத்தை தவிர மற்ற அடிப்படை, வம்சம் எல்லாம் துண்டிக்கப்பட்டு விடும்.[74]

## முப்பத்து நான்காம் ஹதீது

اخرج ابن عساكر في تاريخه ، عن ابن عمر رضي اللّه عنه قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: كُلُّ نَسَبٍ وَ صِهْرٍ مُنْقَطِعٌ يَوْمَ الْقِيَامَةِ إِلاَّ نَسَبِي وَ صِهْرِيْ.

இப்னு அஸாகிர்[75] தனது வரலாற்று கிரந்தத்தில் இப்னு உமர் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மறுமை நாளில் எனது திருமண உறவு முறையையும், வம்சத்தையும் தவிர மற்ற அனைத்து திருமண சொந்தங்களும், வம்சமும் துண்டிக்கப்பட்டு விடும்.[76]

---

[74]அல் மு;ஜமுல் கபீர் பாக 1 பக் 129, பைழுல் கதீர் பாக 5 பக் 35, தாரீகு பக்தாதி பாக 1 பக் 271, அத்தத்வீன் - ரா;பியி பாக 2 பக் 98, மஸ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 173, தகாயிருல் உக்பா பக் 6

[75]அபுல் காஸிம் அலீ இப்னு ஹஸன் இப்னு ஹிபதுல்லாஹ் இப்னு அப்துல்லாஹ் இப்னு ஹவூஸைன் டமஸ்கஸி,'முஹத்திது ஷாம்' என பிரபல்யம் பெற்ற இவர் வரலாற்று ஆசிரியரும், ஹாபிழும் அதிகமாக சுற்றுப் பயணத்தை மேற்கொண்டவருமாவார். அதிகமான நூற்களை எழுதியுள்ள போதிலும் 'டமஸ்கஸ் மாநகரத்தின் வரலாறு' என்ற நூல் மிகவும் முக்கியமானதாகும். இவர் ஹி 571இல் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு அல் அ;லாம் பாக 5 பக் 82 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[76] அல் மு;ஜமுல் கபீர் பாக 1 பக் 124, கன்சுல் உம்மால் பாக 6 பக் 102, ;பத்ஹவூல் பயான் பாக 7 பக் 34, பைழுல் கதீர் பாக 5 பக் 35, முஸ்தத்ரகுஸ் சஹீஹைன் பாக 3 பக் 158, அல் ;புஸவூலுல் முஹிம்மா பக் 28.

## முப்பத்தைந்தாம் ஹதீது

**اخرج الحاكم، عن ابن عباس، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اَلنُّجُوْمُ اَمَانٌ لِأَهْلِ الْأَرْضِ مِنَ الْغَرَقِ، وَ اَهْلُ بَيْتِي اَمَانٌ لِأُمَّتِي مِنَ الْاِخْتِلَافِ فَإِذَا خَالَفَهَا قَبِيْلَةٌ اِخْتَلَفُوا فَصَارُوا حِزْبَ اِبْلِيْس.**

ஹாகிம், இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது,நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘நட்சத்திரங்கள் பு‘மியிலுள்ளவர்களை மூழ்குவதிலிருந்து காப்பாற்றுகிறது. எனது அஹ்லுல் பைத்துக்கள் என் உம்மத்தினரை பிரிவினையிலிருந்து பாதுகாக்கின்றனர். எனவே, எவரேனும் ஒரு குழுவினர் அவர்களுக்கு எதிராக செயற்பட்டால் அவர்கள் ஷைத்தானுடைய கட்சியாகின்றனர்’’.[77]

## முப்பத்தாறாம் ஹதீது

**اخرج الحاكم، عن انسقال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: وَعَدَنِي رَبِّي فِي اَهْلِ بَيْتِي مَنْ اَقَرَّ مِنْهُمْ بِالتَّوْحِيْدِ وَلِيَ بِالْبَلَاغِ اَنَّهُ لَايُعَذِّبُهُمْ.**

ஹாகிம், அனஸ்[78] (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

---

[77]அல் முஸ்தத்ரக் பாக 3 பக் 149, கன்சுல் உம்மால் பாக 6 பக் 217, முன்தஹபு கன்சில் உம்மால் பாக 5 பக் 94, ஜம்உல் ஜவாமி; பாக 1 பக் 451, அஸ்ஸவாயிக் பக் 140.

எனது குடும்பத்தில் எவரேனும் இறை ஏகத்துவத்தையும் எனது நபித்துவத்தையும் ஏற்றிருந்தால் இறைவன் அவரை வேதனை செய்யமாட்டான் என எனக்கு வாக்களித்துள்ளான்''.[79]

## முப்பத்தேழாம் ஹதீது

**اخرج ابن جرير في تفسيره، عن ابن عباس في قوله تعالى :وَ لَسَوْفَ يُعْطِيكَ رَبُّكَ فَتَرْضىٰ قال: مِنْ رِضٰى مُحَمَّدٍ اَنْ لَا يَدْخُلَ اَحَدٌ مِنْ اَهْلِ بَيْتِهِ النَّارَ.**

இப்னு ஜரீர் தபரி[80] தனது அல்குர்ஆன் விரிவுரை நூலில் 'உமது இறைவன் உமக்கு (உயர்பதவிகளைக்) கொடுப்பான்,

---

[78]அபு' ஹம்ஸா அனஸ் இப்னு மாலிக் இப்னு நஸ்ர் அன்ஸாரி எனப்படும் இவர் ஹிஜ்ரத்திற்கு 10 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார். சிலகாலம் நாயகத்தின் பணியாளனாக இருந்து அன்னாரின் மரணத்தைத் தொடர்ந்து டமஸ்கஸவுக்கும் பின் பஸராவுக்குமாக இடம்பெயர்ந்து ஹி 93இல் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு உஸ்துல் காபா பாக 1 பக் 127, தத்கிரதுல் ஹவூப்;பாழ் பாக 1 பக் 44-45 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[79]அல் முஸ்தத்ரக் பாக 3 பக் 150, கன்சுல் உம்மால் பாக 6 பக் 216, முன்தஹபு கன்சில் உம்மால் பாக 9 பக் 92, அஸ்ஸவாயிக் பக் 140.

[80]அபு' ஐ;பர் முஹம்மத் இப்னு ஜரீர் இப்னு யஸீத் இப்னு கதீர் தபரி ஹி 214இல் ஆமுல் என்ற இடத்தில் பிறந்து ஹி 310 ஷவ்வால் பிறை 28 சுபஹ் வேளையில் மரணித்தார். அவர் முஸ்லிம் உலகின் மிகப்பெரும் அறிஞர்களில் ஒருவராகும். பெறுமதிமிக்க பல நூற்களை எழுதியுள்ளார். அவற்றுள் 'ஜாமிஉல் பயான் ;பீ தப்ஸீரில் குர்ஆன்','தாரீகுல் உமம் வல் முலூக்' போன்றவை மிகவும் பிரபல்யமானவையாகும். அவரின் வாழ்க்கை குறிப்பு தத்கிரதுல் ஹவூப்;பாழ் பாக 2 பக் 710-716, அல் அன்ஸாப் பாக 9 பக் 41 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அப்போது நீர் திருப்தியடைவீர்'[81]என்ற வசனத்தின் வியாக்கியானத்தில், இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்திருப்பதாவது,''நாயகம் (ஸல்) அவர்கள் பொருந்திக் கொள்ளும் இடங்களில் ஒன்றுதான், அன்னாரின் குடும்பத்தில் இருந்து எவரும் நரகம் நுழையாது இருப்பது'' என இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள்.[82]

## முப்பத்தெட்டாம் ஹதீது

**اخرج البزار، و ابو يعلى، و العقيلي، و الطبراني، و ابن شاهين، عن ابن مسعود،قال:**

**قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اِنَّ فَاطِمَةَ اَحْصَنَتْ فَرْجَهَا فَحَرَّمَ اللّٰهُ ذُرِّيَّتَهَا عَلَى النَّارِ.**

பஸ்ஸார்,அபு‘ ய;லா[83], அகீலீ[84], தபரானி, இப்னு ஷாஹீன்[85] ஆகியோர் இப்னு மஸ்ஊத்[86] (ரழி) அவர்களிடமிருந்து

---

81 சூரா அள்ளுஹா வசனம் 5

82பைழுல் கதீர் பாக 4 பக் 77, அஸ்ஸவாயிக் பக் 95, கன்சுல் உம்மால் பாக 6 பக் 215, தப்ஸீர் தபரி பாக 30 பக் 232, தகாயிருல் உக்பா பக் 19, அத்துர்ருல் மன்தூர் பாக 6 பக் 361.

83அபு‘ ய;லா அஹ்மத் இப்னு அலீ முதன்னா இப்னு யஹ்யா இப்னு ஹிலால் தமீமி. ‘அல் முஸ்னத் அல்கபீர்’ என்ற கிரந்தத்தின் ஆசிரியரான இவர் ஹி 210 ஷவ்வால் மாதம் பிறந்து ஹி 308இல் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு தத்கிரதுல் ஹவ்ழ்ப்;பாழ் பாக 2 பக் 707-709 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அறிவிப்பதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘நிச்சயமாக பாத்திமா (ரழி) அவர்கள் தமது கற்பைப்

---

[84]அபு‘ ஜ;பர் முஹம்மத் இப்னு அம்ர் இப்னு மூஸா இப்னு ஹம்மாத் அகீலீ ஹிஜாஸி,‘அல் ளுஅ;பா’ என்ற நூலின் ஆசிரியரான இவர் நம்பகமான முஹத்திஸ் ஆவார். மக்காவிலும் மதினாவிலும் வாழ்ந்து ஹி 322இல் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு அல் வா;பி பில் வ;பயாத் பாக 4 பக் 291,தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 1 பக் 833இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[85]அபு‘ ஹப்ஸ் உமர் இப்னு அஹ்மத் இப்னு உஸ்மான் இப்னு அஹ்மத் பக்தாதி, இப்னு ஷாஹீன் என அறியப்படும் இவர் சுமார் 330 நூற்களின் ஆசிரியராவார். அவற்றுள் ஒன்று ‘அத் தப்ஸீருல் கபீர்’ ஆகும். இது 1500 பாகங்களைக் கொண்டது. ஹி 297இல் பிறந்த இவர் ஹி 385 துல்ஹஜ் மாதத்தில் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு அல் முன்தழம் பாக 7 பக் 182, காயதுந் நிஹாயா பாக 1 பக் 588, லிஸானுல் மீஸான் பாக 4 பக் 283, தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 1 பக் 978-990 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[86]அபு‘ அப்திர் ரஹ்மான் அப்தில்லாஹ் இப்னு மஸ்ஊத் இப்னு கா;பில் இப்னு ஹபீப் ஹதலி, ஆரம்பகால நபித்தோழர்களில் ஒருவர். அபு‘ நயீம் என்பவரின் அறிவிப்பின் படி இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஆறாம் நபராகும். மேலும் முதன்முதலாக அல்குர்னை சப்தமிட்டு ஓதியவரும் இவரேயாகும். நாயகம் (ஸல்) அவர்களுக்கு ‘கித்மத்’ பணிவிடை செய்பவராகவும் அன்னாருடைய இரகசியங்களை பேணக்கூடிய நம்பிக்கைக்குறியவராகவும் திகழ்ந்தார். அவரின் தாயின் பெயர் உம்மு அப்த் பின்த் அப்துவுத் ஆகும். இதனால் இவருக்கு ‘உம்மு இப்னி அப்த்’ என்ற பட்டப்பெயரையும் சூட்டியிருந்தனர். இரண்டு ஹிஜ்ரத்திலும் பங்கேற்றார். முதலாவதாக ஹபஷாவுக்கும் (தற்போதைய எதியோபியா) அடுத்ததாக மதினாவுக்கும் ஹிஜ்ரத் செய்தார். இவர் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து கூபாவின் ‘பைதுல்மால்’ திறைசேரியின் பொறுப்பதிகாரியானர். உஸ்மான் (ரழி) அவர்களின் ஆட்சி காலத்தில் கலீபாவின் நடவடிக்கைகளைக் கண்டு கோபமுட்டிருந்த இவர் ஹி 32இல் மதினாவில் மரணித்தபோது இரவோடு இரவாக ஜென்னதுல் பகீயில் நல்லடக்கம் செய்யப்பட்டார். இவரின் வாழ்க்கை குறிப்பு அல் அ;லாம் பாக 4 பக் 280 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாத்தார்கள், இதனால் இறைவன் அவர்களுடைய சந்ததியினரை நரகிற்கு ஹராமாக்கியுள்ளான்.[87]

## முப்பத்தொன்பதாம் ஹதீது

اخرج الطبراني، عن ابن عباس رضي اللّه عنه، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلملفاطمة رضي اللّه عنها: اِنَّ اللّٰهَ غَيْرُ مُعَذِّبِكِ وَلَا وُلْدِكِ.

தபரானி, இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் அன்னை பாத்திமா (ரழி) அவர்களுக்குச் சொன்னார்கள்: ‘‘இறைவன் உம்மையும் உமது பிள்ளைகளையும் வேதனை செய்யமாட்டான்’’.[88]

## நாற்பதாம் ஹதீது

اخرج الترمذي و حسنه، عن جابر، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: يَا اَيُّهَا النَّاسُ اِنِّي تَرَكْتُ فِيْكُمْ مَا اِنْ اَخَذْتُمْ بِهِ لَنْ تَضِلُّوا: كِتَابَ اللّٰهِ وَ عِتْرَتِي.

---

[87]ஸவாயிது முஸ்னத் பஸ்ஸார் பக் 280, அல் முஸ்தத்ரக் பாக 3 பக் 152, கன்சுல் உம்மால் பாக 6 பக் 219, அஸ்ஸவாயிக் பக் 232, நஸ்லுல் அப்ரார் பக் 78, மீஸானுல் இ;திதால் பாக 3 பக் 216, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 202, தாரீகு பக்தாத் பாக 3 பக் 54, தயாருல் உக்பா பக் 48, அல் மு;ஜமுல் கபீர் பாக 1 பக் 24.

[88]கன்சுல் உம்மால் பாக 3 பக் 165, முன்தஹபு கன்சில் உம்மால் பாக 5 பக் 97, நஸ்லுல் அப்ரார் பக் 83, அஸ்ஸவாயிக் பக் 223.

திர்மதி, ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் அன்ஸாரி (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘மக்களேயூ உங்கள் மத்தியில் ஒன்றை விட்டுச் செல்கிறேன். அவற்றை நீங்கள் எடுத்துக் கொள்ளும் காலமெல்லாம் வழிதவறவே மாட்டீர்கள். அவை அல்குர்ஆனும் எனது குடும்பமுமாகும்.[89]

## நாற்பத்தோராம் ஹதீது

اخرج الخطيب في تاريخه، عن علي رضياللّه عنه قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: شَفَاعَتِي لِأُمَّتِي مَنْ اَحَبَّ اَهْلَ بَيْتِي.

கதீப் பக்தாதி[90] தனது வரலாற்று கிரந்தத்தில் ஹஸரத் அலீ (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘எனது உம்மத்தில் என்னுடைய

---

[89]திர்மிதி பாக 2 பக் 308, கன்சுல் உம்மால் பாக 1 பக் 48, அல் மு;ஜமுல் கபீர் பாக 1 பக் 129.

[90]அபு‘பக்ர் அஹ்மத் இப்னு அலீ இப்னு தாபித் இப்னு அஹ்மத் இப்னு மஹ்தி பக்தாதி,‘கதீப்’ என அறியப்படும் இவர் ஹி 392இல் ‘காஸியா’ (பக்தாதிற்கும் கூபாவிற்கும் இடையிலுள்ள) இடத்தில் பிறந்து பக்தாதிலே வளர்ந்தார். அறிவைத்தேடி மக்கா, பஸரா, தீனவர், கூபா போன்ற பல இடங்களுக்கும் சென்றுள்ளார். இலக்கியவாதியும் கவிஞருமான கதீப், நூற்களை வாசிப்பதிலும் எழுதுவதிலும் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார். ‘தாரீக் பக்தாத்’,‘அல் ஜாமிஉ’,‘அல் கி;பாயா’,‘அல் முத்த;பகு வல் மு;ப்தரகு’ போன்றவை அவர் எழுதிய நூற்களில் சிலதாகும். இவர் ஹி 463இல் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு தத்கிரதுல் ஹவு;ப்;பாழ் பாக 1 பக் 135-136 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஷபாஅத்து (பரிந்துரை) எனது அஹ்லுல் பைத்தை நேசித்தவருக்கே கிடைக்கும்.[91]

## நாற்பத்திரண்டாம் ஹதீது

**اخرج الطبراني، عن ابن عمر رضي اللّه عنه، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اَوَّلُ مَنْ اَشْفَعُ لَهُ مِنْ اُمَّتِي اَهْلُ بَيْتِي.**

தபரானி, இப்னு உமர் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘என் உம்மத்தில் முதலாவதாக நான் எனது அஹ்லுல் பைத்தினருக்கே ஷபாஅத் செய்வேன்’’.[92]

## நாற்பத்து மூன்றாம் ஹதீது

**اخرج الطبراني، عن المطلب بن عبد اللّه بن حنطب، عن ابيه، قال: خَطَبَنَا رَسُولُ اللّٰهِ صلى اللّه عليه (وآله) و سلم بِالْجُحْفَة، فقال: أَلَسْتُ اَوْلٰى بِكُمْ مِنْ أَنْفُسِكُمْ، قَالُوا: بَلىٰ يَا رَسُولَ اللّٰهِ، قَالَ: فَإِنِّي سَائِلُكُمْ عَنْ اِثْنَيْنِ، عَنِ الْقُرْآنِ وَ عِتْرَتِي .**

---

[91]தாரீகு பக்தாத் பாக 2 பக் 146, கன்சுல் உம்மால் பாக 6 பக் 217, அல் ஜாமிஉஸ் சகீர் பாக 2 பக் 49, யனாபீஉல் மவத்தா பக் 185.

[92] மஜ்மஉஸ் ஸவாயித் பாக 1 பக் 280, கன்சுல் உம்மால் பாக 6 பக் 215, தகாயிருல் உக்பா பக் 20, பைழுல் கதீர் பாக 2 பக் 90, அஸ்ஸவாயிக் பக் 111.

தபரானி,முத்தலிப் இப்னு ஹன்தப்[93], அவர் தன் தந்தையிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் ‘ஜவூஹ்;பா’[94]வில் வைத்து ஒரு பிரசங்கம் செய்தார்கள். அதில் அவர்கள் கூறினார்கள். “நான் உங்களிடத்தில் உங்களை விட சிறந்தவனில்லையா?” எனக்கேட்ட போது, செவிமடுத்துக் கொண்டிருந்தவர்கள்,“ஆம் (சிறந்தவர்) யா றஸவூலல்லாஹ்யூ” என்றனர். பின் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: “நிச்சயமாக நான் உங்களிடம் இரண்டு விடயங்களைப் பற்றி விசாரிப்பேன், ஒன்று இறைவேதம், மற்றையது எனது குடும்பம்”.[95]

## நாற்பத்து நான்காம் ஹதீது

**اخرج الطبراني، عن ابن عباس، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: لَا تَزُوْلُ قَدَمَا عَبْدٍ يَوْمَ الْقِيَامَةِ حَتّٰى يُسْأَلَ عَنْ أَرْبَعٍ، عَنْ عُمْرِهِ فِيْمَا أَفْنَاهُ، وَعَنْ جَسَدِهِ فِيْمَا اَبْلَاهُ، وَعَنْ مَالِهِ فَيْمَا اَنْفَقَهُ، وَمِنْ اَيْنَ اكْتَسَبَهُ، وَعَنْ مَحَبَّتِنَا اَهْلَ الْبَيْتِ.**

தபரானி, இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

---

[93]முத்தலிப் இப்னு அப்தில்லாஹ் இப்னு ஹன்தப் இப்னு ஹாரித் இப்னு உபைத் இப்னு உமர் இப்னு மஹ்ஸவூம் மஹ்ஸவூமி குறைஷி, பத்ர் போரின் போது கைதாகி பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். இவரின் வாழ்க்கை குறிப்பு தஹ்தீபுத் தஹ்தீப் பாக 10 பக் 178, மீஸானுல் இ;திதால் பாக 4 பக் 129 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[94]‘ஜவூஹ்;பா’ மக்காவுக்கும் மதினாவும் இடையிலுள்ள ஒரு இடத்தின் பெயர்.

[95]மஜ்மஉஸ் ஸவாயித் பாக 5 பக் 195, உஸ்துல் காபா பாக 3 பக் 147, ஹில்யதுல் அவ்லியா பாக 1 பக் 64.

‘‘(மறுமையில்) நான்கு விடயங்களை விசாரிக்கின்ற வரை அடியானின் பாதங்கள் நகர மாட்டா. அவனின் வாழ்நாளை எவ்வாறு கழித்தான் என்பது பற்றியும், உடலை எவ்விடயத்தில் அழித்தான் என்பது பற்றியும், சொத்தை எவ்வாறு சம்பாதித்து அதை எவ்வழியில் செலவு செய்தான் என்பது பற்றியும்,அஹ்லுல் பைத்துக்களான எங்களை நேசித்தது பற்றியும் கேட்கப்படும்.[96]

## நாற்பத்தைந்தாம் ஹதீது

اخرج الديلمي، عن علي رضي اللّه عنه قال: سمعت رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلميقول: اَوَّلُ مَنْ يَرِدُ عَلَيَّ الْحَوْضَ اَهْلُ بَيْتِي

தைலமி,[97]ஹஸரத் அலீ (ரழி) அவர்களிடமிருந்து நாயகம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டதாக அறிவித்துள்ளதாவது: ‘‘முதன்

[96]கன்சுல் உம்மால் பாக 7 பக் 212, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 10 பக் 346, ஹைதமி மேற்கூறிய ஹதீதின் தொடரில் இவற்றையும் அறிவித்துள்ளார்: ‘அப்போது நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் உங்களை நேசிப்பதின் அடையாளம் என்ன? என கேட்டதற்கு, அவர்கள் தனது கையை அலீயுடைய தோல் புஜத்தின் மேல் தட்டியவர்களாக சொன்னார்கள் அலீயை நேசிப்பது என்னை நேசிப்பதின் அடையாளமாகும்.’ கி;பாயதுத் தாலிப் பக் 183.

[97]அபு‘ ஷுஜா; ஷீர்வைஹி இப்னு ஷஹ்ர்தார் இப்னு ;பனா கொஸ்ரு தைலமி, எனப்படும் இவர் ஹாபிழும், பெரும் முஹத்திதும்,‘தாரிகுல் ஹமதான்’,‘அல் ;பிர்தௌஸ்’ ஆகிய நூற்களின் ஆசிரியருமாவார். முஹம்மத் இப்னு பள்ல் இஸ்;பராயினி, ஷஹ்ர்தார் இப்னு ஷீர்வைஹி தைலமி போன்றவர்கள் இவரிடமிருந்து ஹதீஸ் அறிவிப்புச் செய்துள்ளனர். இவர் ஹி 509இல் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 4 பக் 1259இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முதலாக ஹவ்ழுல் கவ்ஸரில் என்னிடம் வருபவர்கள் எனது அஹ்லுல் பைத்துக்களாகும்''.[98]

## நாற்பத்தாறாம் ஹதீது

اخرج الديلمي، عن علي رضي اللّه عنه، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اَدِّبُوا اَوْلَادَكُمْ عَلَى ثَلاَثِ خِصالٍ: حُبِّ نَبِيِّكُمْ، وَحُبِّ اَهْلِ بَيْتِهِ، وَعَلىٰ قَرَاءَةِ الْقُرْآنِ، فَإِنَّ حَمَلَةَ الْقُرْآنِ فِي ظِلِّ اللّٰهِ يَوْمَ لا ظِلَّ إِلاَّ ظِلُّهُ مَعَ اَنْبِيَائِهِ وَاَصْفِيَائِهِ.

தைலமி,ஹஸரத் அலீ (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘உங்கள் குழந்தைகளுக்கு மூன்று விடயங்களைக் கற்றுக் கொடுங்கள். உங்கள் நபியை நேசிப்பது, அன்னாரின் அஹ்லுல் பைத்துக்களை நேசிப்பது, மேலும் அல்குர்ஆனை ஓதுவது. நிச்சயமாக,அல்குர்ஆனைச் சுமந்தவர் நிழலே இல்லாத அந்த நாளில் அல்லாஹ்வுடைய நிழலில் நபிமார்களுடனும் நல்லவர்களுடனும் இருப்பார்''.[99]

## நாற்பத்தேழாம் ஹதீது

---

[98]கன்சுல் உம்மால் பாக 6 பக் 17, தகாயிருல் உக்பா பக் 18, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 131, யனாபீஉல் மவத்தா பக் 268.

[99]கன்சுல் உம்மால் பாக 8 பக் 278, பைழுல் கதீர் பாக 1 பக் 225, அல் ஜாமிஉஸ் சகீர்- சுயு‘த்தி பாக 1 பக் 42, அல் ;பத்ஹவூல் கபீர் பாக 1 பக் 59, அஸ்ஸவாயிக் பக் 103.

اخرج الديلمي، عن علي رضي اللّه عنه، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اَثْبَتُكُمْ عَلَى الصِّرَاطِ اَشَدُّكُمْ حُبًّا لِأَهْلِ بَيْتِي وَاَصْحَابِي.

தைலமி,ஹஸரத் அலீ (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘ஸிராத்’ பாலத்தால் மிகவும் உறுதியாக நடப்பவர் உங்களில் எனது அஹ்லுல் பைத்துக்களையும் எனது தோழர்களையும் கடுமையாக நேசித்தவர்களாவர்.[100]

## நாற்பத்தெட்டாம் ஹதீது

اخرج الديلمي، عن علي رضي اللّه عنه، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: أَرْبَعَةٌ اَنَا لَهُمْ شَفِيْعٌ يَوْمَ الْقِيَامَةِ، اَلْمُكْرِمُ لِذُرِّيَّتِي، وَالْقَاضِي لَهُمُ الْحَوَائِجَ، وَالسَّاعِي لَهُمْ فِي اُمُوْرِهِمْ عِنْدَ مَا اضْطَرُّوا إِلَيْهِ، وَالْمُحِبُّ لَهُمْ بِقَلْبِهِ وَلِسَانِهِ.

[100]கன்சுல் உம்மால் பாக 6 பக் 216, அஸ்ஸவாயிக் பக் 185, குனூஸவூல் ஹகாயிக் பக் 5.

தைலமி,ஹஸரத் அலீ (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘மறுமையில் நான்கு பேர்களுக்கு நான் ‘ஷபாஅத்’ பரிந்துரை செய்வேன். எனது சந்ததியினரை கண்ணியப்படுத்தியவர், அவர்களது தேவைகளை நிவர்த்தி செய்தவர், தேவை ஏற்பட்டபோது அவர்களுக்கு உதவி செய்ய விரைந்தவர் மற்றும் உள்ளத்தாலும் நாவினாலும் அவர்களை நேசித்தவர்’’.[101]

## நாற்பத்தொன்பதாம் ஹதீது

**اخرج الديلمي، عن ابي سعيد رضي اللّه عنه قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اِشْتَدَّ غَضَبُ اللّٰهِ عَلَى مَنْ آذَانِي فِي عِتْرَتِي.**

தைலமி, அபு‘ ஸயீத் அல்குத்ரி (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘எனது அஹ்லுல் பைத்துக்களுடைய விடயத்தில் என்னை நோவினை செய்தவர் மீது அல்லாஹ்வின் கோபம் அதிகமாகும்’’.[102]

## ஐம்பதாம் ஹதீது

---

[101]கன்சுல் உம்மால் பாக 6 பக் 217, மேலும் பாக 8 பக் 151, தகாயிருல் உக்பா பக் 18, அஸ்ஸவாயிக் பக் 237, மக்தல்- அல் குவாரஸ்மி பாக 2 பக் 25.

[102]அஸ்ஸவாயிக் பக் 184, பைழுல் கதீர் பாக 1 பக் 515.

اخرج الديلمي، عن ابي هريرة، قال: قالرسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اِنَّ اللّٰهَ يَبْغُضُ الْآكِلَ فَوْقَ شِبَعِهِ، وَالْغَافِلَ عَنْ طَاعَةِرَبِّهِ، وَالتَّارِكَ لِسُنَّةِ نَبِيِّهِ، وَالْمُحَقِّرَ ذِمَّتَهُ، وَالْمُبْغِضَ عِتْرَةَ نَبِيِّهِ، وَالْمُؤْذِي جِيْرَانَهُ.

தைலமி, அபு' ஹவூரைரா (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ''அதிகம் உண்ணுபவன், இறைவழிபாட்டை மறந்தவன், நபி (ஸல்) அவர்களின் சுன்னாவை விட்டவன், தனது இனபந்துக்களை குறைத்து மதிப்பீடு செய்பவன், நாயகம் (ஸல்) அவர்களின் குடுபத்தினருடன் விரோதம் கொள்பவன், அயல் வீட்டாரை நோவினை செய்பவனின் மீது இறைவன் கோபம் கொள்கிறான்''.[103]

## ஐம்பத்தோராம் ஹதீது

اخرج الديلمي، عن ابي سعيد قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اَهْلُ بَيْتِي وَالْاَنْصَارُ كَرِشِي وَعَيْبَتِي فَاقْبَلُوا مِنْ مُحْسِنِهِمْ، وَتَجَاوَزُوا عَنْ مُسِيْئِهِمْ.

தைலமி,அபு'ஸயீத் அல் குத்ரி (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

[103]கன்சுல் உம்மால் பாக 9 பக் 191.

‘‘எனது அஹ்லுல் பைத்துக்களும், அன்ஸாரிகளும் என் ரகசியம் மற்றும் என் அமானிதத்தின் பாதுகாலவர்களாவர். எனவே, அவர்களில் நல்லவர்களின்பால் வந்து அவர்களில் மோசமானவர்களை மன்னித்து விடுங்கள்’’.[104]

## ஐம்பத்திரண்டாம் ஹதீது

**اخرج ابو نعيمفي الحلية، عن عثمان بنعفان رضي اللّه عنه قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: مَنْ اَوْلٰى رَجُلاً مِنْ بَنْي عَبْدِ الْمُطَّلِبِ مَعْرُوْفًا فِي الدُّنْيَا فَلَمْ يَقْدُرِ الْمُطَّلِبِيُّ عَلَى مُكَافَأَتِهِ، فَاَنَا اُكَافِئُهُ عُنْهُ يَوْمَ الْقِيَامَةِ.**

அபு‘ நயீம்[105] என்பவர் ஹில்யதுல் அவ்லியா என்ற நூலில் உஸ்மான் இப்னு அ;ப்;பான்[106] (ரழி) அவர்களிடமிருந்து

[104]கன்சுல் உம்மால் பாக 6 பக் 165, அஸ்ஸவாயிக் பக் 225, அல் ;புஸவூலுல் முஹிம்மா பக் 27.

[105]அபு‘ நயீம் அஹ்மத் இப்னு அப்தில்லாஹ் இப்னு அஹ்மத் இப்னு இஸ்ஹாக் இப்னு மூஸா இப்னு மெஹ்ரான் இஸ்பஹானி எனப்படும் இவர் ஹி 336 இல் பிறந்து ஹி 430இல் மரணித்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 3 பக் 1092-1098, அல் பிதாயா வந் நிஹாயா பாக 12 பக் 45, தபகாது சுப்கி பாக 4 பக் 18, மீஸானுல் இ;திதால் பாக 1 பக் 111, வ;பயாதுல் அ;யான் பாக 3 பக் 52, லிஸானுல் மீஸான் பாக 11 பக் 251 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[106]உஸ்மான் இப்னு அ;ப்;பான் இப்னு அபில் ஆஸ் இப்னு அப்துஸ் ஸம்ஸ் குறைஷி, ஹிஜ்ரத்திற்கு 37 வருடங்களுக்கு முன் மக்காவில் பிறந்து நபித்துவம் கிடைத்து மிக குறுகிய காலத்திற்குப் பின் இஸ்லாத்தை ஏற்றார். இவர் ஹி 23இல் இரண்டாம் கலீபா உமர் (ரழி) அவர்கள் கொலை செய்யப்பட்ட பின் கலீபாவால் தெரிவு செய்யப்பட்ட ஷவூராவின் மூலம் ஆட்சி பீடத்தில் அமர்ந்தார். இரண்டாம் கலீபாவின் காலத்தில் கிடைத்த தொடர் வெற்றியின் வாரிஸாக (அனந்தரக் காரராக) இருந்த இவரின்

அறிவித்துள்ளார்: “உலகில் எவர் அப்துல் முத்தலிபுடைய சந்ததியினரில் ஒருவருக்கு நலவு செய்து, அதற்காக முத்தலிபுடைய சந்ததி ஏதாவது சன்மானம் கொடுக்க சக்தி பெற்றிருக்கவில்லை என்றால் மறுமைநாளில் அவருக்கு நான் சன்மானம் வழங்குவேன்.[107]

## ஐம்பத்து மூன்றாம் ஹதீது

**اخرج الخطيب، عن عثمان بن عفّان رضي اللّه عنه، قال، قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: مَنَ صَنَعَ صَنِيْعَةً اِلىٰ اَحَدٍ مِنْ خَلَفِ عَبْدِ الْمُطَّلِبِ فِي الدُّنْيَا فَعَلَيَّ مُكَافَأَتُهَ اذَا لَقِيَنِي.**

காலத்திலும் நிறைய இடங்கள் முஸ்லிம்களினால் வெற்றி கொள்ளப்பட்டன. அல்குர்ஆனை ஒன்று சேர்த்தது இவர் செய்த முக்கிய பணிகளுல் ஒன்றாகும். உஸ்மான் (ரழி) யின் ஆட்சிக் காலத்திலேயே பனு உமையாக்கள் இஸ்லாமிய சாம்ராஜியத்தில் பெரும் செல்வாக்குப் பெற்று ஆட்சியை மோசமாக வழிநடத்தினர். இச்செயல் பொது மக்களை கோபமடையச் செய்து கலீபாவின் 12 வருட ஆட்சிக்குப் பின் ஹி 35 துல்ஹஜ் மாதம் கலீபா கொலை செய்யப்படுவதற்கும் காரணமாய் அமைந்தது. இவரின் வாழ்க்கை குறிப்பு தத்கிரதுல் ஹவூ;ப்;பாழ் பாக 1 பக் 8-10, அல் இஸாபா பாக 4 பக் 269-271 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[107]கன்சுல் உம்மால் பாக 6 பக் 203, தகாயிருல் உக்பா பக் 19, அஸ்ஸவாயிக் பக் 111, பைழுல் கதீர் பாக 6 பக் 172.

கதீப் பக்தாதி, உஸ்மான் இப்னு அ;ப்;பான் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘எவரேனும் ஒருவர் உலகில் அப்துல் முத்தலிபுடைய பரம்பரையில் தோன்றிய ஒருவருக்கு நல்லது செய்தால் (மறுமையில்) அவர் என்னைச் சந்திக்கும்போது அவரின் சன்மானத்தை கொடுப்பேன்’’.[108]

## ஐம்பத்து நான்காம் ஹதீது

اخرج ابن عساكر، عن علي رضي اللّه عنه،قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: مَنْ صَنَعَ اِلىٰ اَحَدٍ مِنْ اَهْلِ بَيْتِي يَدًا كَافَأْتُهُ يَوْمَ الْقِيَامَةِ.

இப்னு அஸாகிர்,ஹஸரத் அலீ (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘எவர் ஒருவர் என் அஹ்லுல் பைத்தில் ஒருவருக்கு நல்லது செய்வாரோ மறுமையில் நான் அவருக்கு சன்மானம் வழங்குவேன்’’.[109]

---

[108] கன்சுல் உம்மால் பாக 6 பக் 203-204,216, அஸ்ஸவாயிக் பக் 185, யனாபீஉல் மவத்தா பக் 370.

[109] கன்சுல் உம்மால் பாக 6 பக் 216, பைழுல் கதீர் பாக 6 பக் 172, தகாயிருல் உக்பா பக் 19, அஸ்ஸவாயிக் பக் 185.

## ஐம்பத்தைந்தாம் ஹதீது

اخرج الباورديعن ابي سعيد رضي اللّه عنه، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اِنِّي تَارِكٌ فِيْكُمْ مَا اِنْ تَمَسَّكْتُمْ بِهِ لَنْ تَضِلُّوا، كِتَابَ اللّٰهِ سَبَبٌ طَرَفُهُ بِيَدِ اللّٰهِ، وَطَرَفُهُ بِأَيْدِيْكُمْ، وَعِتْرَتِي اَهْلَ بَيْتِي، وَاِنَّهُمَا لَنْ يَتَفَرَّقَا حَتّٰى يَرِدَا عَلَيَّ الْحَوْضَ.

பாருதி[110] அபு‘ ஸயீத் அல் குத்ரி (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘உங்கள் மத்தியில் ஒன்றை விட்டுச் செல்கின்றேன். அதைப்பற்றிப் பிடித்துக் கொள்ளும் காலமெல்லாம் நீங்கள் வழிதவறவே மாட்டீர்கள். இறைவேதம், அதன் கயிற்றின் ஒரு பகுதி இறைவனிடமும் மறுபகுதி உங்கள் கைகளிலும் உள்ளது. (மற்றையது) எனது குடும்பமான அஹ்லுல் பைத்துக்களாகும். நிச்சயமாக,ஹவ்ழுல் கவ்தரில் என்னிடம் வரும்வரை அவ்விரண்டும் பிரியவே மாட்டாது’’.[111]

---

[110]அபு‘ முஹம்மத் அப்தில்லாஹ் இப்னு முஹம்மத் இப்னு அகீல் பாருதி என்ற இவர், இஸ்பஹானில் வசித்தவர். அபு‘பக்ர் அஹ்மத் இப்னு சல்மான் நஜ்ஜார் பக்தாதி என்பவரிடமிருந்து ஹதீஸ் அறிவித்துக் கொண்டிருந்தார். இவரின் வாழ்க்கை குறிப்பு அல் அன்ஸாப் பாக 2 பக் 65இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[111]கன்சுல் உம்மால் பாக 1 பக் 165, அல் மு;ஜமுல் கபீர் பாக 1 பக் 129, ஹில்யதுல் அவ்லியா பாக 1 பக் 355, தாரீகு பக்தாதி பாக 8 பக் 442, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 10 பக் 363, கன்சுல் உம்மால் பாக 7 பக் 225.

## ஐம்பத்தாறாம் ஹதீது

**اخرج احمد و الطبراني، عن زيد بن ثابت رضي اللّه عنه، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: اِنِّي تَارِكٌ فِيْكُمْ خَلِيْفَتَيْنِ، كِتَابَ اللّٰهِ حَبْلٌ مَمْدُوْدٌ مَا بَيْنَ السَّمَاءِ وَالْأَرْضِ، وَعِتْرَتِي اَهْلَ بَيْتِي، وَاِنَّهُمَا لَنْ يَتَفَرَّقَا حَتّٰى يَرِدَا عَلَيَّ الْحَوْضَ.**

அஹ்மத் மற்றும் தபரானி ஆகியோர் ஸைத் இப்னு தாபித் (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘நான் உங்கள் மத்தியில் இரண்டு பிரதிநிதிகளை விட்டுச் செல்கின்றேன். (ஒன்று) இறைவேதம். (அதன்) கயிறு வானத்திற்கும் பு‘மிக்கும் இடையில் நீண்டுள்ளது. (மற்றையது) எனது குடும்பமான அஹ்லுல் பைத்துக்கள். இவை இரண்டும் ஹவ்ழுல் கவ்ஸரில் என்னிடம் வரும்வரை ஒருபோதும் ஒன்றையொன்று பிரியவே மாட்டா’’.[112]

## ஐம்பத்தேழாம் ஹதீது

**اخرج الترمذي، و الحاكم، و البيهقي في شعب الايمان، عن عائشة رضي اللّه عنها مرفوعا: سِتَّةٌلَعَنْتُهُمْ وَلَعَنَهُمُ اللّٰهُ وَ كُلُّنَبِيٍّ مُجَابُ(الدَّعْوَةِ): اَلزَّائِدُ فِي كِتَابِ اللّٰهِ،**

[112]முஸ்னத் அஹ்மத் பாக 5 பக் 181, மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 163, கன்சுல் உம்மால் பாக 1 பக் 44, அஸ்ஸவாயிக் பக் 136.

وَالْمُكَذِّبُ بِقَدَرِ اللّٰهِ، وَالْمُتَسَلِّطُ بِالْجَبَرُوْتِ فَيُعِزُّ بِذٰلِكَ مَنْ اَذَلَّ اللّٰهُ، وَيُذِلُّ مَنْ اَعَزَّهُ اللّٰهُ، وَالْمُسْتَحِلُّ لِحُرَمِ اللّٰهِ، وَالْمُسْتَحِلُّ مِنْ عِتْرَتِي مَا حَرَّمَ، وَالتَّارِكُ لِسُنَّتِي

திர்மிதி, ஹாகிம், பைஹகி ஆகியோர் அன்னை ஆயிஷா[113] (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘நான் ஆறு பேரைச் சபித்துள்ளேன். இறைனும் அவர்களைச் சபித்துள்ளான். ஒவ்வொரு நபிமாரது துஆவும் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. இறைவேதத்தில் ஏதாவது ஒன்றை அதிகமாக்குபவன்.
2. இறைவனது விதியை (கத்ரை) பொய்ப்பித்தவன்.
3. பலாத்காரமாக மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்தி அதன் மூலம் இழிவானவர்களை கண்ணியப்படுத்தி, கண்ணியமானவர்களை இழிவு படுத்துபவன்.
4. இறை இல்லங்களைப் பாதுகாக்காதவன்.
5. எனது அஹ்லுல் பைத்துக்களின் விடயத்தில் அல்லாஹ் விலக்கியவைகளை ஆகுமெனக் கருதுபவன்.

[113]உம்முல் மு;மினீன் ஆயிஷா பின்த் அபீபக்ர் இப்னு அபீ குஹா;பா, ஹிஜ்ரத்திற்கு பத்து வருடங்களுக்கு முன் பிறந்து, பத்ர் போரின் பின் நாயகம் (ஸல்) அவர்களை மணந்து கொண்டார். இவர் ஹி 35இல் தல்ஹா, சுபைர் போன்றவர்களின் விடாமுயற்சி, தூண்டுதலின் காரணமாக இமாம் அலீக்கு எதிராக கிளர்ச்சி செய்தார். அது இஸ்லாமிய வரலாற்றில் ‘ஜமல் யுத்தம்’ என அழைக்கப்படுகிறது. அன்னை ஆயிஷா (ரழி) அவர்களிடமிருந்து சுமார் 2210 ஹதீதுகள் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளன. அவர் ஹி 75இல் தனது 55வது வயதில் மரணித்தார். அவரின் ஜனாஸாவை அபு‘ஹுரைரா (ரழி) தொழுவித்தார். அன்னையின் வாழ்க்கை குறிப்பு அல் இஸாபா பாக 8 பக் 129-141, தத்கிரதுல் ஹவு;ப;பாழ் பாக 1 பக் 27-29 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

6. எனது வழிமுறையை விட்டவன்.[114]

## ஐம்பத்தெட்டாம் ஹதீது

اخرج الدار قطنى في الافراد، و الخطيب في المتفق، عن علي رضي اللّه عنه، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: سِتَّةٌ لَعَنَهُمُ اللّٰهُ وَلَعَنْتُهُمْ وَ كُلُّنَبِيٍّ مُجَابُ الدَّعْوَةِ، اَلزَّائِدُ فِي كِتَابِ اللّٰهِ، وَالْمُكَذِّبُ بِقَدَرِ اللّٰهِ، وَالرَّاغِبَ عَنْ سُنَّتِي إِلَى بِدْعُةٍ، وَالْمُسْتَحِلُ مِنْ عِتْرَتِي مَا حَرَّمَ اللّٰهُ، وَالْمُتَسَلِّطُ عَلَى اُمَّتِي بِالْجَبَرُوْتِ لِيُعِزَّ مَنْ اَذَلَّ اللّٰهُ وَ يُذِلَّ مَنْ اَعَزَّ اللّٰهُ، وَالْمُرْتَدُّ اَعْرَابِياً بَعْدَ هِجْرَتِهِ.

தாருல் குத்னி[115]‘அல் அ;ப்ராத்’ என்ற நூலிலும் கதீப் ‘அல் முத்த;பக்’ என்ற நூலிலும் ஹஸரத் அலீ (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ‘‘ஆறு பேரை அல்லாஹ் சபித்துள்ளான், நானும் அவர்களைச் சபித்துள்ளேன், ஒவ்வொரு நபியுடைய பிரார்த்தனையும் அங்கீகரிக்கப்படும்.

1. இறைவேதத்தில் அதிகரிப்புச் செய்தவன்.

---

114முஸ்தத்ரகுல் ஹாகிம் பாக 1 பக் 36, அல்ஜாமிஉஸ் சஹீஹ் பாக 2 பக் 22-23, யனாபீஉல் மவத்தா பக் 277, கன்சுல் உம்மால் பாக 8 பக் 191, மிஷ்காதுல் மஸாபீஹ் பாக 1 பக் 38.

115அபுல் ஹஸன் அலீ இப்னு உமர் இப்னு அஹ்மத் இப்னு மஹ்தி தாருல் குத்னி பக்தாதி, ஹி 336இல் பிறந்து ஹி 385இல் மரணித்தார். ‘சுனன் தாரில் குத்னி’ எனும் கிரந்தம் இவரின் முக்கிய நூற்களில் ஒன்றாகும். இவரின் வாழ்க்கை வரலாறு தத்கிரதுல் ஹவ்ஃப்;பாழ் பாக 4 பக் 991-995 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. இறைவனது விதியை பொய்ப்பித்தவன்.
3. எனது வழிமுறையை விட்டுவிட்டு பித்அத்தை நோக்கிச் சென்றவன்.
4. எனது அஹ்லுல் பைத்துக்கள் மீது இறைவன் விலக்கியவற்றை ஆகுமெனக் கருதுபவன்.
5. இழிவானவர்களை கண்ணியப்படுத்தும், நல்லவர்களை இழிவுபடுத்தும் நோக்கில் பலாத்காரமாக ஆதிக்கம் செலுத்துபவன்.
6. (இறைவன், இறைத்தூதரின் பால்) வந்து (ஹிஜ்ரத் செய்து) பின் மீண்டும் ஜாஹிலிய்யாக் கால வழிமுறைக்குச் சென்றவன்.[116]

## ஐம்பத்தொன்பதாம் ஹதீது

**اخرج الحاكم في تاريخه، و الديلمي، عن ابي سعيد رضي اللّه عنه، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: ثَلَاثٌ مَنْ حَفِظَهُنَّ حَفِظَهُ اللّٰهُ لَهُ دِيْنَهُ وَدُنْيَاه، وَمَنْ ضَيَّعَهُنَّ لَمْ يَحْفَظِ اللّٰهُ لَهُ شَيْئًا، حُرْمَةُ الْإِسْلَامِ، وَحُرْمَتِي وَحُرْمَةِ رَحِمِي.**

ஹாகிம் 'தாரீகுந் நைஷாபு'ர்' எனும் தனது நூலிலும் மற்றும் தைலமி, அபு' ஸயீத் அல் குத்ரி (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ''மூன்று விடயங்கள் உள்ளன. எவர் அதைப் பாதுகாக்கின்றாரோ இறைவன் அவரின் தீனையும் துன்யாவையும் பாதுகாக்கின்றான். அவற்றை வீணடித்தவருக்காக இறைவன் எதையும்

[116]கன்சுல் உம்மால் பாக 16 பக் 341, அல் கௌலுல் ;பஸ்ல் - ஹழ்ரமி, பாக 1 பக் 466.

பாதுகாக்கவில்லை. அவை: இஸ்லாத்தின் கண்ணியம், எனது கண்ணியம் மற்றும் என் குடும்பத்தினரது கண்ணியம்''.[117]

## அறுபதாம் ஹதீது

**اخرج الديلمي، عن علي رضي اللّه عنه، قال: قال رسول اللّه صلى اللّه عليه (وآله) و سلم: خَيْرُ النَّاسِ اَلْعَرَبُ، وَخَيْرُ الْعَرَبِ قُرَيْشٌ، وَخَيْرُ قُرَيْشٍ بَنُو هَاشِمٍ.**

தைலமி, ஹஸரத் அலீ (ரழி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ''மனிதர்களில் சிறந்தவர்கள் அறபிகள், அறபிகளில் சிறந்தவர்கள் குறைஷிகள், குறைஷிகளில் சிறந்தவர்கள் பனூ ஹாஷிம்கள்''.[118]

---

[117]மஜ்மஉஸ் ஸவாயித் பாக 9 பக் 68, அஸ்ஸவாயிக் பக் 90, அல் மு;ஜமுல் கபீர் பாக 3 பக் 126

[118]முஸ்னதுல் ;பிர்தௌஸ் பக் 57, கன்சுல் உம்மால் பாக 6 பக் 214, அல் அன்ஸாப் பாக 1 பக் 15.